T. 1673

# கீர்த்தன மாலை

பாபநாசம் சிவன்
இயற்றியது

அல்லையன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை - 4

# இசை மணி மாலை

'பெரியசாமித்தூரன்'
இயற்றியது

விரைவில் வெளிவரும்
உங்கள் தேவைக்கு எழுதவும்

---

# ராமரத்ன மணி மாலை

டி. நீலாயதாக்ஷி
இயற்றியது

கான சரஸ்வதி
டி. கே. பட்டம்மாள்
முகவுரை கொண்டது

•

விலை ரூ. 1-8-0

---

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். சென்னை-4

# கீர்த்தன மாலை

பாபநாசம் சிவன்
இயற்றியது

❋

ஸங்கீத கலாநிதி
முசிரி சுப்ரமண்ய ஐயர் அவர்களின்
முகவுரையும்

❋

ஆஸ்தானக் கவிஞர் நாமக்கல்
திரு. வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்களின்
பாராட்டுரையும் கொண்டது


அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை

உரிமை பதிவு] 1949 [விலை ரூ. 2 - 8

முதல் பதிப்பு
அக்டோபர், 1949

அல்லையன்ஸ் பிரஸ்,
மயிலாப்பூர் :: சென்னை-4

# INTRODUCTION

I am indeleted to Mr. P. R. Sivan popularly known as Papanasam Sivan for giving me an oppurtunity to say a few words about the collection of his songs which are being published for the benefit of the lovers of good compositions.

Mr. Sivan is undoubtedly **a composer of exceptional Merit** and his name will go down in history as a pre-eminent composer of the 20th Century.

His compositions are noted for the aptness of words, originality and excellence of musical values.

May the Lord almighty give him life to serve the cause of Music still more to the benefit of the great art is the sincere prayer.

Mylapore
MADRAS
12-9-49

Musiri SUBRAMANIA IYER

# முன்னுரை

சிறந்த சாகித்தியங்களை விரும்பும் சிறந்த சங்கீத அபிமானிகளுடைய விருப்பத்துக்கு இணங்க வெளியிடப்படும் இந்த நூலுக்கு, எனக்கு முன்னுரை எழுதும் சந்தர்ப்பமளித்ததற்கு, நான் பாபநாசம் சிவன் அவர்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன்.

ஸ்ரீ சிவன் இருபதாம் நூற்றாண்டின் தலை சிறந்த சாகித்திய கர்த்தா என்று சரித்திரம் கூறும் என்றால் மிகையாகாது.

அவருடைய சாகித்தியங்களில் சொல்நயம் செறிவு, சங்கீதலக்ஷணம் ஆகியவற்றை ஒருங்கே காணமுடியும் என்பது பிரசித்தம்.

சங்கீதக் கலைக்கு மேலும் மேலும் சேவை செய்து நீடூழிவாழ அவருக்கு ஆண்டவன் அருள் புரிய வேண்டும் என்பதே என்னுடைய பிரார்த்தனை.

முசிரி, சுப்பிரமண்ய ஐயர்

அரசவைக் கவிஞர்—நாமக்கல்

## திரு வே. இராமலிங்கம் பிள்ளை அவர்களின் பாராட்டுரை

மிருக உணர்ச்சிகளே மிகுந்துள்ள மனிதப்பிறவியை மற்ற மிருகங்களைவிட உயர்ந்ததாகச் செய்வது மனிதருக்குள்ள ஆன்ம உணர்ச்சியே யாகும். அந்த ஆன்ம உணர்ச்சியை ஸ்திரப்படுத்துவது தெய்வ நம்பிக்கை. இந்த தெய்வ நம்பிக்கைக்கு பலமுண்டாக்குவது பக்தியாகும். பக்தியை சித்திக்கச் செய்வது பஜனை. அந்த பஜனைக்கு மிகவும் அவசியமானது பாடல்கள். அந்தப் பாடல்களை சங்கீத ஞானத்தோடு பாடினால் பாமர மக்களும் பரவசமடைகிறார்கள்.

நம்முடைய நாட்டின் ஆன்ம ஞானத்தைப் பாதுகாத்து, தர்மங்களைத் தழைக்கச் செய்து, ஒழுக்கத்தை உயரச் செய்து வந்தது இந்த பக்தியூட்டும் பஜனைப் பாட்டுகளே யாகும். காலகதியின் மாறுதல்களால் இடையிடையே மனித வர்க்கத்துக்கு இந்த பக்தி குறைவது சகஜம். அதனால் நம் நாட்டிலும் கொஞ்சகாலமாக பஜனைகள் குறைந்து விட்டன. இருந்தாலும் சங்கீதக் கச்சேரிகளில் இன்னும் பக்திப் பாட்டுகளே மிகுந்திருப்பது நம்முடைய பாக்கியம்தான்.

ஸ்ரீ பாபநாசம் சிவன் அவர்கள் இயற்றியுள்ள இந்த 'கீர்த்தன மாலை' பக்தி யூட்டக் கூடிய பாடல்கள் நிறைந்ததாக இருப்பது மிகவும் மகிழத் தக்கது. பக்தி புகட்டும் பஜனைகளுக்கு இது மிகவும் உபயோகப்படும். அத்துடன் சங்கீதத்தில் அநுபவஞானம் நிரம்பிய ஸ்ரீ சிவன் அவர்களின் கீர்த்தனங்கள் சங்கீதப் பயிற்சிக்கு மிக்க உபயோகமானவை.

இந்த நூலை சங்கீதப் பள்ளிக்கூடங்களுக்குப் பாடமாக வைப்பதற்கு ரஸிகர்களும் அரசாங்கமும் ஆதரவு செய்வார்கள் என்று நம்புகிறேன்.

நாமக்கல், வே. ராமலிங்கன்

# முன்னுரை

வடமொழியில் 'வாஸனை' மூன்று. லோகவாஸனை; தேஹவாஸனை; சாஸ்த்ரவாஸனை இவை மூன்றும், தனித் தனியே பற்பல வடிவங்கொண்டு, அமரர்களையும் முனிவர்களையும் கூட மயக்கும். களங்கமற்ற ஆன்மாவை மாட்டிவைக்கும் விலங்குகள். மாயையின் செல்வச் சேய்கள். உடல் தோன்றின நாள்முதல் மறையும் நாள் வரையில், நோயினும் பேயினும் கொடுமை செய்து உயிரைப்பற்றிக்கொண்டு, வாழ்வைப் பாழ்செய்யும் விஷச் சூருவளி, ஆடிக்காற்றில் அம்மி பறக்கும்பொழுது, இலவம் பஞ்சுபோன்ற என்னைப்பற்றிப் பேசவேண்டுமோ?

'கலை' என்ற சிறப்புப் பெயரைக் கொடுத்து உண்மையை மறைத்தாலும், 'ஸினிமா' என்ற நவீனக்காக்ஷி, மக்களைப் பிடித்த லோகவாஸனையைச் சேர்ந்த ஒருவகை தொத்து நோய்தான். இன்றளவும், தமிழ்நாட்டு ஸினிமாக் கலையென்ற மலையைக் கெல்லிக் கெல்லிப் பார்த்தும், நன்மை என்ற சுண்டெலிகூட அகப்படவில்லை. அளவிலடங்காத தீமை மலிந்தது கண்கூடு. இதற்கு என்னைக் காட்டிலும் ப்ரத்யக்ஷ ருஜு வேறு வேண்டியதில்லை. ஆண்டவனருளைப் பாடித் திரிந்த என்னை வலிய இழுத்து இருட்டறைக்குள் தள்ளிவிட்டது. போலிப்புகழ் பரவினதென்னவோ உண்மை, தேவைக் கதிகமாய் - அற்பச் செல்வஞ் சேர்ந்து, 'அஜீர்ண' நோயுங் கண்டது. ஸினிமாவிற் புகுந்தநாளாய் என் வாழ்வே பாழானதென்பது - என் - தனிமனிதனுன என் - திடமான கொள்கை.

ஆனாலும் முழுப்பாழல்ல, என்பதை இந்தப் புத்தகத்தில் உள்ள பல 'ஸினிமாப்' பாட்டுக்களைப் படிப்பவர்

உணர்வர். இவைகளில் வரும் ஆண்டவன் பெயரும் குணமுங் கலந்த பாட்டுகளைப் பாடுவதைக் கொண்டு 'பெருமூச்சுவிட வேண்டியவனு யிருக்கிறேன். வேறுவழி இல்லை. வானவில்போல் சிலநாளில் மறையும் 'ஸினிமாப்' படங்களோடு, இந்தப் பாட்டுக்களும் மாய்ந்து போக விடவேண்டாமென்று கருதியே - தமிழ் நாட்டு ரஸிகர்களுக்குக் காணிக்கையாகத், தொகுத்துப் புத்தக வடிவில் வெளியிடலானேன். இதிலுள்ள பிழைகளை எடுத்துக் காட்டுவோர் எனக்கு நல் - வழிகாட்டிகளாவார். பல பாட்டுக்கள் தமிழ் நாடெங்கும் முன்பே பரவியிருப்பவை. சிலபாட்டுக்களை நேரில்தான் கற்றுக் கொள்ள வேண்டுமென்று இசைவாணர்களைக் கட்டாயப் படுத்தும் நோக்கங்கொண்டே ஸ்வரப்படுத்தாமல் வெளியிட்டிருக்கிறேன். இதற்குப் பரிவுடன் சிறப்புரை தந்த ஸங்கீதகலாநிதி, ஸங்கீதக் கலாசாலை 'பிரின்ஸிபால்' ஸ்ரீ முசிரி ஸுப்ரஹ்மண்ய ஐயர் அவர்களுக்கும், சென்னை அரசாங்க ஆஸ்தான வித்வான். நாமக்கல் ஸ்ரீ வே. ராமலிங்கம் பிள்ளை அவர்களுக்கும் என் வணக்கமுள்ள நன்றி உரித்தாகும். இதனை அழகாய் அச்சிட்டு வெளியிட்ட, ஸமீபத்தில் தமிழ்நாட்டின் துர்ப்பாக்யவசத்தால் காலஞ்சென்ற அல்லயன்ஸ் கம்பெனி ஸ்ரீ வி. குப்புஸ்வாமி ஐயருக்கு எளியேன் கைம்மாறு செய்யும் ஆற்றலில்லாதவன். தமிழ்நாட்டில் தலைசிறந்த 'பப்ளிஷர்'களில் மூத்தவரான ஐயருக்கு, எந்தப் புத்தகத்தையும் அழகானமுறையில் வெளியிடுவதே தனிப் பண்பு.

இங்ஙனம்
தொண்டன்
பி. ஆர். சிவன்.



பாபநாசம் சிவன்

உ

# கீர்த்தன மாலை

## 1. வர்ணம்

ராகம் - தன்யாசி　　　　தாளம் - ஆதி

பல்லவி

நீ இந்த மாயம் செய்தால்
　　ந்யாயம் தானோ தயாநிதியே

அநுபல்லவி

பாயும் மாரனம்பினாலே புண்படு—
　　பாவையைக் கண்ணால் பாராமல் இன்னும்

(சிட்டா ஸ்வரமும்—ஸ்வர ஸாஹித்யமும்)

நீ த பா ம க ரி ஸா நி ஸ க ம பா
நீயலால் துணையிலை புவி தனிலே
த ப ம க ரி ஸ நி ஸ ரி ஸ ம க ம ப தப
தயைபுரிவையே நிஜ மி து வனஜநயன

மப க ம ப ம ப நி ப நி ஸ நி தப மா
நின துபய சரணம் கனவிலும் மறவா
பநிஸதாபமப காமப நிநிஸா
எனது தாபமற வந்தருள் இறைவா

ரிநிஸபாநி மபகக மமபபநிநி
முரளிகான குளிர்நிறைமதி வதனனே
ஸகரிஸ நிஸநிதப கமப மகரிஸ
முராஹர முனிவர்தொழும் கமலசரணனே

கா ம ப நி ஸா கா மகரி ஸநி தா—
ராதைமண வாளா துயரமினிதா—
பா க ம ப நி ஸ ரீ ஸா நி த ப ம ப
ளேன்முகில்நிகர் தயாளா யதுபதியே (நீ இந்த)

சரணம்

ஆயர்குல தீபமே அருள்தாராய்

(சிட்டா ஸ்வர ஸாஹித்யங்கள்)

1. ஸா, பா, நீ, மாபா காம
ஸ்வாமீ நீ கண்பார் ஸத்ய—
பா, நீ ஸா, நீதா பாம
பா மா லோ லா கோபால (ஆயர்)

2. ஸா ரி ஸ நி ரி ஸ தா ப ம ப க ம
ஸா ரஸதள விலோசன பரம
ஸா மக மாபம பநிஸ மபநி கம
பா வன ஸாமஜ வரத மதுரை வளர் (ஆயர்)

3. ஸரி ஸநிஸ மபநி ஸநிதப மகரிஸ
தருணமிது நினைந்து நினைந்துளம் வருந்தினேன்
கரிநிஸமக மபத மபநிஸ மபநி
கருணை நிதியே மனது கனிந்தருள் விரைந்து (ஆயர்)

4. ஸா ஸா காரி ஸநி ரீஸநித
பா ராய் புன்னகையோ டென்னருகில்
பா பா நீமபநி காமபநி
வா ராய் நீ மனமிரங் கியெனைப்

ஸரி ஸ்நி ஸாநிப நிஸநிபநீ பம
பரிவுடனே எனது யிருடனென்றென
பத பமபா கமபநி மபநீ
அன்று கலந்தே னெனை இன்று மறந்தாய்

பநிஸ தாப மகமபத பாமகரி
பனி நிலாவில் தவழ்இனிய தென்றலிலும்
ஸகரி ஸாரி ஸநி ஸகம நிஸகம
எனது மேனி அழல்மெழுகு போலுருக

பகம பாநிஸ நிஸாகரி மகரிஸ
பகலிரா துயிலுரு திருவிழிகளும்
ரிஸா நிதபா தபமகரி ஸமகம
பரா முகமும் தகுமோ மனமும் சிலையோ (ஆயர்)

## 2. வர்ணம்

ராகம் - ஸ்ரீரஞ்ஜனி தாளம் - ஆதி

### பல்லவி

ஸ்வாமீ நீ மனமிரங்கி யருள்
தா மா தயைநிதியே முருககுஹ
பூமேல் வாழ்வே வேம்பென நி—
னைந்தாள் பூவை மனம் நொந்தாள் நீ

### அநுபல்லவி

தாமதம் செய்தால் மனம் வ—
ருந்த நேருமே மனமொடிந்து
மாமயல் வெயில் புழுவாய்த் துடித்தாள் திரு—
மால் மருகா ஷண்முகா பரிவுடனே.

## சிட்டா ஸ்வரம்

ஸாஸா நிஸநித ஸநிதம கரிஸரி
கா கா மகதம நிதஸநி தமதநி
ஸரிகநீ நிஸரிதா தநி மதநி
ஸா நித மாகரிஸா ரிகமாதநி (ஸ்வாமீ)

## சரணம்

வாத நோய்கொண்டாள்—விரைந்து—ம—
ருந்துதா—இவள் பெரும் பிடி—

## சிட்டா ஸ்வரங்கள்

1. மா தமாநிதமா கமாரிக
மா கரிகஸா நீஸாரீக— (வாதநோய்)

2. மதமக மாதநிஸ ரிஸநிஸா நித
நிஸநித நிஸரிஸ நிதமக ரிஸரிக— (வாதநோய்)

3. மகமநி தநிகரி மகரிநி ஸரிதநி
கமதநி ரிகமத ஸரிகம நிஸரிக— (வாதநோய்)

4. தா - நி ஸா - த நிஸநித நீ - ஸ
நீ - தமா - கரி நிஸரி கா - ம
கம நிதாநி கரி மகாரி நிஸரி - த
ரிரிநிஸ தநிதம ததநிநிஸா - ஸ

ரிகமா கரிகஸா ரிநீதநி
ஸா, ஸா, ரிகரிஸ நிதநீ நீ
ஸரிஸநி தம தா தா நி
ஸாஸநித தமா மகரி ரிஸா ஸரிக— (வாதநோய்)

## விநாயகர் கீர்த்தனங்கள்

### 3. ராகம் - ஸ்ரீரஞ்ஜனி தாளம் - ஆதி

#### பல்லவி

கஜவதன கருணாஸதன சங்—
கரபால லம்போதர ஸுந்தர (கஜவதன)

#### அநுபல்லவி

அஜன் அமரேந்த்ரனும் முனிவரும் பணிபங்
கஜசரண சரணம் சரணம் ஜய (கஜவதன)

#### சரணம்

நீயே மூவுலகிற் காதாரம்
நீயே சிவாகம மந்த்ர ஸாரம்
நீயே வாழ்வில் என்ஜீவாதாரம்
நீ அருள்வாய் ஸுமுகா ஓங்கார (கஜவதன)

4. ராகம் - திலாங் தாளம் - ஆதி

## பல்லவி

ஸ்ரீ கணேச சரணம் கஜானன
தேவர் முனிவர் பணியும் தயாகர (ஸ்ரீ கணேச)

## அநுபல்லவி

நாகாபரணனே நான்மறை போற்றும்
நாமனே ப்ரணவரூபனே ஜய (ஸ்ரீ கணேச)

## சரணம்

பாதம் நம்பும் ராமதாஸ வரதனே
மோதகப்ரியனே கௌரீஸுதனே
ஆதிதேவன் உனதின்னருளின்றியேல்
வேதனும் மாலும் செய்தொழிலுண்டோ (ஸ்ரீ கணேச)

5. ராகம் - ப்யாகட தாளம் - ஆதி

## பல்லவி

கைகொடுத்தாள் ஐயா துதிக்கையா
கைகொடுத்தாள் ஐயா கரியாரையா — நின்
கழலிணை சரண் ஐயா
கருணையொடித் தருணம் மனம் கனிந்து (கை கொடு)

### அநுபல்லவி

பொய்கிளர் மாயமண் வாழ்வெனும் இருளில்
புகுந்து வருந்த மனம்
இணங்காததையுன் திருவுள்ள மறியாதா (கை கொடு)

### சரணம்

அயன் முதல் வானவரும் உனதருளால்
ஐந்தொழில் புரிகின்றார்—மறைபுகழும்
ஆதிதேவன் நீயென நம்பினேனினிச்
சோதனை போதுமையா—பெரும்

புயலில் சிக்குண்ட வாழைபோலும் சுழன்
றுள்ளம் திகைக்குதய்யா—முப்பழமும்
பொரிய வலருந்தும் மெய்யன்பர் ஸஹாயா—
புகலிலேன் யானைமுகனே பேதைஎன்னைக்— (கை கொடு)

6. ராகம் - ஸரஸ்வதி தாளம் - ஆதி

### பல்லவி

அருள்புரி ஐங்கரனே—மதம்பொழியும்
ஆனைமுகனே கருணாகரனே திரு (வருள்)

### அநுபல்லவி

இருள் மயமாம் புவி வாழ்வினிலே—உன
திணையடியலதொரு துணையறியேன்—திரு (வருள்)

சரணம்

ஓங்காரரூப கணநாயகா
உமைமகிழ் மகனே விநாயகா
நீங்காதெனது நெஞ்ச ஆலயத்திலே
நீ என்றும் துணை நின்று இன்பந்தந்தே திரு (வருள்புரி)

7 ராகம் - சுத்தஸாவேரி தாளம் - ஆதி

பல்லவி

ஸதாசிவ குமாரா—கண்பாராய்
ஸகல லோகாதாரா—ஸ்ரீ கௌரி (ஸதாசிவ)

அநுபல்லவி

பதாரவிந்தனே ஸுரமுனிவர் பணியும்
ப்ரணவஸ்வரூப கஜானன நீ துணை (ஸதாசிவ)

சரணம்

அடியார் நினைத்தவரம் அருள்வாய் கவலையுடன்
இடையூறெல்லாம் சிதறடிப்பாய்—உனது
கடைக்கண் பார்வை இருந்தால்—கரை காணாத
கடலும் சிற்றோடை யாகாதோ—கணபதியே (ஸதாசிவ)

## கலைமகள் துதிகள்

### 8. ராகம் - ஸரஸ்வதி தாளம் - ஆதி

#### பல்லவி

ஸரஸ்வதி தயைநிதி நீகதி
தண்ணருள் தந்தருள்வாய் பாரதி (ஸர)

#### அநுபல்லவி

கரமலர் மிளிர் மணிமாலையும் வீணையும்
கருணை பொழியும் கடைக்கண்ணழகும் வளர் (ஸர)

#### சரணம்

நின் அருளொளி இலையானால் மன இருள்
நீங்குமோ ஸகலகலை மாதே—வெள்—
ளன்ன வாஹனி வெண் கமலமலர் வளரும்
வாணி வெள்ளைக் கலையணி புராணி (ஸர)

### 9. ராகம் - தன்யாசி தாளம் - ஆதி

#### பல்லவி

வாணி அருள்புரிவாய்—அளிகுல
வேணி மலரயன் ராணி உயர்கலை (வாணீ)

### அனுபல்லவி

பேணிப் புகழும் பாவாணர்க் கருளும்—சுக—
பாணி ஸுரர் தொழும் புராணி சரணம் கலை (வாணி)

### சரணம்

வீணை புஸ்தக தாரிணி பூரணி
வித்யா ரூபிணி து:க நிவாரணி
காணே னுனையலதோர் துணை பாரதி
கருணைகரி எனைக் காத்தருள் நிகதி (வாணி)

## முருகன் துதிகள்

### 10. ராகம் - அடாணா தாளம் - ஆதி

### பல்லவி

உலக வாழ்விலும் நின்னருளின்றி
ஓரடி வைப்பதும் எளிதோ ஏழை (உலகவாழ்)

### அநுபல்லவி

கவியிலுன்னை மறந்தால் கிட்டுமோ
கைவல்யம் மறுமையில் மட்டுமோ (உலகவாழ்)

### சரணம்

த்யான யோக ஜபதபங்களறியேன்
ஞானிகள் ஸங்க மிணங்கியு மறியேன்
கான சாஸ்த்ரமும் கற்றறியேன் மனம்
கனிவிலேன் முருகனே குருடனேன் (உலகவாழ்)

### 11. ராகம் - தோடி தாளம் - ஜம்பை

### பல்லவி

தணிகைவளர் சரவணபவா—நின்தாள் சரணம்
கருணைமிகு கருணை புரிவாய் —தண்சோலைத் (தணிகை)

### அநுபல்லவி

அணியும் நவமணி பணிகள்
தகதகென நிறைமதிநேர்
அறுமுகமும் இளநகைவெண்
ணிலவுமிழ உலகுபுகழ் (தணிகை)

### சரணம்

துள்ளி விளையாடி வரும் தோகைமயில் மேலே
வள்ளியுடன் பெய்வளை தெய்வானை யிருபாலே
அள்ளியிருகண் பருகும் அன்பர்புகழ் வேளே
வெள்ளிமலை நாதன் தரும் வேல்கொள் பெருமாளே (தணிகை)

12. ராகம் - கன்னடா      தாளம் - ஆதி

பல்லவி

சரவணபவகுகனே — ஷண்முகனே
சரணமருள் விசாகனே — ஸுமுகனே      (சரவண)

அநுபல்லவி

ஆவணி ஹரன் உமை மனம்மகிழ் மகனே
அரவணை துயில் ஹரி அருமை மருகனே      (சரவண)

சரணம்

எனக்குனையலதொரு துணையிலை துய்யா
இரக்கமில்லையா வடிவேல் முருகையா
வனக்குறமகள் புணர் பன்னிருகையா
வணங்கும் ராமதாஸன் உன் அடைக்கலம் ஐயா      (சரவண)

13. ராகம் - வஸந்த      தாளம் - ஆதி

பல்லவி

மாதயை நிதியெனும் நீதயை புரிந்தருள் மாதவன் மருகனே
முருகனே குஹனே மலைமகள் மகனே      (மாதயை)

## அநுபல்லவி

போதயன் பணிமலர்ப் பாதனே மறைமுகன்
புகலரும் ப்ரணவ மஹிமை மெய்ப் பொருளை
புகழ்தாதை காதில் ஓதும்குருநாத

## (சிட்டா ஸ்வரம்)

மா, தா, நீ, தாமாகாரி ஸா, ரீ, நீ, ஸா. தாநீஸ
மகம ஸரிஸ மகமதம கமகரிஸ
ரிஸகரி மகதம கமத நிதா—க
மத கம தநி மத நிஸதநி ரி நி தம
க ம த நீ த ம க மநி தநி ஸா—நி
ஸ ஸ நி தா ஸநி த த நி ம த நி ஸ் மா
க ரி ஸ ஸாநிதம ம தநித மகரிஸ (மாதயை)

## சரணம்

கந்தனே கலியுகந்தனில்—இருகண்
கண்ட தெய்வமென எண்டிசை புகழும்
செந்திலாதிப சிறந்த வேலணியும்
சேவல—அமரர் காவல—ஷண்முக (மாதயை)

## 14. ராகம் - வஸந்த தாளம் - ஆதி

### பல்லவி

மால் மருகா ஷண்முகா முருகா குமரா (மால்மருக)

### அநுபல்லவி

நான்மறை ஸார ஓங்கார ஸ்வரூபா
மாமயில் வாஹனே ஸ்வாமி ப்ரதாபா (மால்மருக)

### சரணம்

வெள்ளி மலைநாதன் கௌரிபால
வேறு துணை காணேன் வந்தெனையாளாய்
வள்ளி தெய்வானை மணாளா தயாளா
வணங்கும் ராமதாஸன் தலையணி தாளா (மால்மருக)

## 15. ராகம் - தேவமனோஹரி தாளம் - ஆதி

### பல்லவி

வந்தருள்வாய் முருகா—பரமஸுகம்
தந்தருள் மால் மருகா

### அநுபல்லவி

சொந்தமுடன் உனை நினைந்திடும் அன்பர்
தயாளா என் இன்ப மணாளா மனமிரங்கி

(சிட்டா ஸ்வரம்)

ஸா—தநீ—பமா—ரிமா—நி
ரீ—மதா—நிரீ—நிஸா—ஸ
ரிமரிஸரீ த நிஸநி தநீ—த
நிபமரிமா பத தநி நிஸா—ஸா

ஸா—தநிஸ தநிபா—மா
மா—ஸரி ம ஸரி ஸா—நிஸ
ஸரி ரி மா ரி ம ம ப ப தா—பத
தநிநிஸா—ரீ ஸநிதநீ பதநி (வந்தருள்)

சரணம்

பாலினும் தேனினும் கனியினும் இனிக்கும்
பார்வதி பாலனே சரவண பவனே
நீலமயிலில் வரும் கருணைகரனே—எந்
நேரமும் என்னுடன் நீ விளையாடவே (வந்தருள்)

16. ராகம் - ஷண்முகப்ரிய தாளம் - ஆதி

பல்லவி

சரவண பவஎனும் திரு மந்திரந்தனை
ஸதா ஜபி என் நாவே—ஓம் (சரவண)

அநுபல்லவி

புரமெரித்த பரமன் நெற்றிக்கண்ணில் உதித்த
போத ஸ்வரூபன் பொற்பாதந் தனைப்பணிந்து (சரவண)

சரணம்

மண்மிசை கிடந்துழல் பிறவிப்பிணியைத் தீர்க்கும்
மாயையகலப் பேரின்ப நெறியில் சேர்க்கும்
தண்மதி நிகர்குளிர் கருணை நிலவுமிழும்
ஷண்முக ப்ரிய ஷடாக்ஷர பாவன (சரவண)

## திருமகள் துதிகள்

17. ராகம் - சங்கராபரணம் தாளம் - திரிபுட

பல்லவி

மஹாலக்ஷ்மி ஜகன்
மாதா மனமிரங்கி வரமருள் (மஹாலக்ஷ்மி)

அநுபல்லவி

மஹா விஷ்ணுவின் மார்பெனும் மணி
பீடமதனில் அமர்ந்திடும்
மன்மதனை ஈன்றருளுந்தாயே
தயா நிதியே மஹா மாயே (மஹாலக்ஷ்மி)

### சரணம்

பாற் கடல் தரும் க்ருபாகரி
பரிந்து வந்தெனையாதரி
பங்கஜ மலர்வளர் அனேயே கடைக்கண்
பார்—ராமதாஸன் பணியும் (மஹாலக்ஷ்மி)

## 18. ராகம் - அடாணு தாளம் - ஆதி

### பல்லவி

நீ இரங்காயெனில் புகலேது - அம்ப
நிகிலஜகந் நாதன் மார்பில்வளர் திரு (நீ)

### அநுபல்லவி

தாய் இரங்காவிடில் சேயுயிர் வாழுமோ
ஸகல வுலகிற்கும் நீ தாயல்லவோ - அம்ப (நீ)

### சரணம்

பாற்கடலி லுதித்த திருமணியே - ஸௌ
பாக்ய லக்ஷ்மி என்னைக் கடைக்கணியே
நாற்கவியும் பொழியும் புலவோர்க்கும் மெய்
ஞானியர்க்கும் உயர் வானவர்க்கும் - அம்ப (நீ)

# திருமால் துதிகள்

## கண்ணன்

19. ராகம் - கேதாரகௌளம் தாளம் - த்ரிபுட

### பல்லவி

*ஸ்வாமிக்கு ஸரி எவரே*
*சந்த்ர வதனன் ஸ்ரீ கிருஷ்ண* (ஸ்வாமி)

### அநுபல்லவி

*ச்யாம ஸுந்தர ஜகன்*
*மோஹன லாவண்யன்*
*கோமள சரணன் கோபிகா ரமணன்*
*குளிர்நகைத் தளர்நடை - பாலக்ருஷ்ண* (ஸ்வாமி)

### சரணம்

*பாற்கட லதனில் பள்ளி கொண்டவன்*
*பாரில் நந்த கோபாலனாய் வந்து*
*பால்தயிர் வெண்ணெய் திருடி யுண்டவன்*
*பதம்பணியும் அன்பர் பவநோயற*
*வந்தருளும் என் ஸரஸ கோபால* (ஸ்வாமி)

20. ராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

## பல்லவி

ஸௌந்தர ரூப கோபாலனைத் தினம்
துதிப்போம் வாருங்கள் - நாமெல்லோரும் (ஸௌந்தர)

## அநுபல்லவி

அந்தமொடாதி இல்லாதவனை - வை
குந்த பதியை ஸ்ரீ லக்ஷ்மீபதியை

## (சிட்டா ஸ்வரம்)

ப த ப மபம கம கரி கரிஸ நிஸா
நிஸரி நிஸரி கஸரி கமரி கமபா
ம க ம பா த நி ஸ ரீஸ் மகரி ஸா,
நிதப பா, மகரி ஸா - ரிகம (ஸௌந்தர)

## சரணம்

பேயென வரும் பூதனை முலைப்பாலுடன்
உயிரையும் உறிஞ்சும் அன்பர் ஸஹாயனை
பிள்ளைப் பருவந்தனில் கோபியர் உள்ளமெனும்
வெண்ணையுண்ட வாயனை மண்ணுண்ட மாயனை

தாயெனவரும் புனித யசோதை யெனும்
இடைக்குல மங்கையின் கண்குளிர
ஸனகாதி யோகியுரும் காணரிய
விச்வரூப தர்சனம் தந்தவனே

(சிட்டா ஸ்வரம்)

பா - த மா - ப ம த ப ம கா - நி
ரீ - ஸ கா - ரி ப ம க ரி ஸா - நி
ஸ ம க ரி நீ - ஸ ரி ப ம க ரீ க
ம் த ப ம கா - ம ஸ ரி க ம பா - ரி
க ம ப த நி ஸா ஸ நி த நீ நி த ப
தா த ப ம பா பா க ம ப த நி ம ப த
நி ஸ ம க ரி ஸ நி ஸா ஸா ரீ ஸா
நி த ப தா பா ம க ரி நீ ஸா ரி க ம (ஸுந்தர)

21. ராகம் - மோஹனம் தாளம் - ஆதி

பல்லவி

ஆயிரம் மன்மதர் ஈடாவரோ மன
மோஹன ச்ருங்கார மூர்த்தி - ரங்கனுக்கு
ஆயிரம் மன்மதர் ஈடாவரோ மன
மோஹன ச்ருங்கார மூர்த்தி பச்சைமுகில்
வண்ணன் கண்ணன் முக
மலர் மதுவுண்ணும் ராதை கண்கள் (மோஹன)

## அநுபல்லவி

பாகன மொழி யமுதாலே - மதுர
இதழின் குழலின் இசையாலே
பரவச மடைந்து உலகை மறந்து
பரமானந்தமடைந்து இரண்டறக் கலந்தாள் - ஜகன்
மோஹன ச்ருங்கார மூர்த்தி
முராரி கம்ஸாரி பீதாம்பரதாரீ (மோஹன)

**2.** ராகம் - கரஹரப்ரிய தாளம் - ஆதி

## பல்லவி

காதலி ராதையைக் கலங்கவைத்தான் - மலர்க்
கண்ணன் இவ்வண்ணமே

## அநுபல்லவி

யாதவ குலாதிபன் - ப்ருந்தா
வனத்தனிலே நினைந்து நினைந்து வாடும் (காதலி)

## சரணங்கள்

1. கண்ணெதிரில் வந்து நகைப்பான் - கிட்ட நெருங்கினால்
குளிர்மலர்ச் சோலைக்குள் ஓடி யொளிப்பான்
கனவில்வந்து கண்ணைப் பொத்துவான் - ஏங்கும்
கைகளுக் கெட்டாமல் குழலிசையில் மயக்கிக் (காதலி)

2. கோபியர்கள் ஆயிரமுண்டு - அழகில் மிகு
கோபியர்கள் ஆயிரமுண்டு இருந்தும்
ராதையிடம் எல்லையற்ற ப்ரேமையு முண்டு - மாதவன்
பேதையவளை எத்தனை சோதனை செய்தான் - அப்பப்ப!
ஆடவர்மனம் இரும்பு - மெல்லியர்மனம் மெழுகு (காதலீ)

23. ராகம் - கரஹரப்ரிய தாளம் - ஆதி

பல்லவி

தயவில்லையா தயாளோ என்றன்
தாயும் தந்தையும் நீயல்லவோ - என்மேல் (தயவில்லையா)

அநுபல்லவி

ஜயஜய நந்த குமாரா - யமுனா
ஜல கல்லோல விஹாரா
ஜய ஜகன்மோஹனாகார ஜய
ஜயமுனி ஜனமந்தாரா - இன்னும் (தயவில்லையா)

சரணம்

விண்ணாடும் கைவல்ய நன்னாடும் வேண்டேன்
வேறுள்ள தேவேந்த்ரப் பதவியும் வேண்டேன்
கண்ணாகண்ணா என்றுன் நாமமே சொல்வேன் - நீ
கைகொடுத்தாலும் விடுத்தாலும் எங்கு செல்வேன் - கொஞ்சம் (தய)

24. ராகம் - ஸ்ரீரஞ்ஜனி தாளம் - ஆதி

பல்லவி

இனியொரு கணம் உனை மறவேன்
யதுகுல திலகா - நான் (இனியொரு)

அநுபல்லவி

தனிப்பெருமை கொள் நீலமேக
ச்யாமளனே தாமரஸ தளாக்ஷனே நான் (இனியொரு)

சரணம்

வறுமையும் பிணியும் மலிந்து மக்கள்
மனை ஸம்ஸார பந்தம் உறினும் அன்றி
மறுமையில் கொடும் நரக முறினும்
வான்பெறினும் ஆபத்பாந்தவனே நான் (இனியொரு)

25. ராகம் - கரஹரப்ரிய தாளம் - ஆதி

பல்லவி

நினைந்துருகும் அடியார் பெருமை அய
ஞதியர் அறிவாரோ - ஐயன் திருமலரடி

## அநுபல்லவி

நனைந்த தாமரை மலர்க் கரத்தால் - கமல
நங்கை அஞ்சி வருடும் மலர்ப்பதம் (நினைந்து)

## சரணங்கள்

1. ஈரடியால் மூவுலகளந்து மற்
றோரடி வைக்க இடமில்லாமல்
ஈரேழுலகும் பாவனஞ் செய்யும் கங்கை
பெருக மஹாபலி முடிதாங்கும் திருவடி (நினைந்து)

## (திச்ர நடை)

2 ஆயர் குலத்திலே - யசோதை
தாயினருகிலே - வெண்ணெய்
வாயுடனே மோஹனப்புந்
நகை வெண்ணிலவிலே

பாயும் யமுனை நதியிலே கா
ளிங்கன் மணி முடியிலே
பையச் சலங்கைகள் கொஞ்ச நடமிடும்
பங்கஜ மலர் பழிக்குஞ் சேவடி (நினைந்து)

## 26. கமாஸ் - ஆதி

### பல்லவி

கோபாலனே தெய்வமாம் - கோகுலம் வளர் (கோபால)

### அநுபல்லவி

பாபஸம்ஹாரனும் ஆபத்பாந்தவனும் (கோபால)

### சரணம்

ஸம்ஸாரமெனும் பேரலையாழியில்
தாழ்ந்திடா தருள் தயாகரனும்
கம்ஸாரி முராரி ஸ்ரீ நரஹரி
ஸனகாதி முனிவர் அமரரும் தொழும்மலர்த்

தாளன் - ராதை பாமை ருக்மிணிம
ணாளன் - த்ரௌபதிக்கருள் பரமத
யாளன் - யமுனையில் வருங்கொடிய
காளிங்கன் முடிதனில் கேளீ நடம்புரியும் (கோபால)

27. ராகம் - தன்யாசி தாளம் - ஆதி

### பல்லவி

கோபால ஸஜ்ஜனபால கோகுல பரிபால - தயாளா (கோபால)

### அநுபல்லவி

கோபியருள்ளம் ஆடையுங் கவர் கள்வா
த்ரௌபதி மானம்காத்த முதல்வா
தேவகி வஸுதேவர் தவப் புதல்வா
ஸ்ரீ ருக்மிணி கேள்வா - எமையாள்வாய் (கோபால)

### சரணம்

உன்பாதமே ஸததம் நம்பினோம்
அன்பாலுன் திருநாமம் புலம்பினோம்
துன்பாழியில் சுழலினும் நீ துணை
இன்பாமுதம் ஊட்டினும் நின்னருள் ஸ்ரீ (கோபால)

28. ராகம் - நாகஸ்வராளி தாளம் - ஆதி

### பல்லவி

ஸ்வாமீ சிறிதும் தயைவல்லையா
தருணமிதையா - ஸுரஸ கோபால (ஸ்வாமி)

### அநுபல்லவி

பூமி புகழும் மதுராபுரி நாயக
பூதனையெனும் பேய்தனை மாய்த்தவ - க்ருஷ்ண (ஸ்வாமி)

### சரணங்கள்

1. காளிங்கன் முடிதனில் கேளீ நடம்புரியும்
தாளா தயாளா வந்தாளாய் கண்ணாளா என் (ஸ்வாமி)

2. கோபியர் கதற அவர் ஆடைகள் கவர்ந்தொளித்தாய்
த்ரௌபதிக்கு ஆடை தந்து மானமுங் காத்தாய் - மாயனே (ஸ்வாமி)

3. வாஸுதேவ கனச்யாமள - ராம
தாஸவரத ஜகன்மோஹன ஏழையென் (ஸ்வாமி)

## 29. ராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி

### பல்லவி

மோஹன முரளீதார - பீதாம்பர துளஸீஹார - முரஹர ஜகன்
[மோஹன

### சரணங்கள்

1. தீனசரண்ய முகுந்தா - தயாகர நித்யானந்த மன (மோஹன)

2. நந்தயசோதை குமார - ஸுர
முனி ஜன ஹ்ருதய விஹார ஜகன் (மோஹன)

3. தாமரை மலரிதழ்க் கண்ணு - ராமதாஸன்
பணியும் மணிவண்ணு மன (மோஹன)

## 30. ராகம் - ஷண்முகப்ரிய தாளம் - ஆதி

### பல்லவி

கண்ணனைப் பணி மனமே - தினமே (கண்ணனை)

### அநுபல்லவி

மண்ணில் யசோதை செய் புண்ய ஸ்வரூபனை
மாதவனை நமது யாதவ தீபனைக் (கண்ணனை)

### சரணங்கள்

1. பாண்டவர் நேயனை பக்த ஸஹாயனைப்
பவளச் செவ்வாயனை பரமனை மாயனைக் (கண்ணனை)

2. மங்கள மூலனை கோகுல பாலனை
மணமிகு துளஸீமாலனை - பாலனைக் (கண்ணனை)

3. விண்ணவர் போற்றவே மண்ணில்வரும் வேதப்
பண்ணனை ச்யாமள வண்ணனைத் தாமரைக் (கண்ணனை)

31. ராகம் - செஞ்சுருட்டி தாளம் - ரூபகம்

எனது உள்ளமே நிறைந்த இன்ப வெள்ளமே
யதுவீரனை நந்தகுமாரனை நினைந்து (எனது)

## சரணங்கள்

மலரே இருவிழி பங்கஜ மலரே திருமுகமும்
மலரே இருகரம் தாமரை மலரே திருவடிகள்
மந்தஹாஸமுந் தவழ்ந்த ஸௌந்தர முகாரவிந்தம் நினைந் (தெனது)

அன்னை தந்தை குருவும் அவன் - அருந்துணை நவநிதியுமவன்
மீராப்ரபு கிரிதர கோபாலனை நினைதொறும் நினைதொறும் (எனது)

32. ராகம் - நாகஸ்வராளி தாளம் - ஆதி

## பல்லவி

முரளீதர மனமோஹன முரஹர
முகுந்த மாதவ பரம தயாகர (முரளீ)

## அநுபல்லவி

சரணாம்புஜ ஸேவையே என் ஜீவனம்
ஜய ஜய தீனசரண்ய பாவன (முரளீ)

### சரணம்

கோபாலனே ராஜ கோபாலனே
குஞ்ஜவி ஹாரி கஞ்ஜவிலோசன
கோவிந்தனே தேவகீ மைந்தனே
குவலய தளச்யாமளனே - கோமள (முரளீ)

## 33. ராகம் – சுத்தஸாவேரி தாளம் – ஆதி

### பல்லவி

சரணாம்புஜம் துணை வாஸுதேவா
ஸனகாதி மாமுனிவர் பணியும் (சரணா)

### அநுபல்லவி

கருணாஸமுத்ர கஞ்ஜதளநேத்ர
பரமபவித்ர பாவனசரித்ர (சரணா)

### சரணம்

மதன மோஹனா கருடவாஹனா
பதிதபாவன ஸுஜன ஜீவனா
வதன சந்த்ரனே அருள் முகுந்தனே
யதுகுலம் வளர்ந்த முரளிகானலோல (சரணா)

34. ராகம் - ஹிந்தோளம் தாளம் - ஆதி

பல்லவி

துணை புரிந்தருள் தருணம் மாதவ
ஸுரர்கள் நாயக உலக நாயகா (துணை புரி)

அனுபல்லவி

மணிகொள் மார்பனே கமலநாபனே
வரத நின்பதம் சரணம் சரணம் (துணை புரி)

சரணம்

விதி பணிந்திடும் ச்ருதி புகழ்ந்திடும்
விமலபாத ஸர்வ புவனமோஹனா
பதிதபாவன கருடவாஹனா
பரம பூருஷ நாராயணனே (துணை புரி)

35. ஸாம - ஆதி (ஸம்ஸ்க்ருதம்)

பல்லவி

நாராயண நளிநாயத லோசன
நமோநம . பாஹி பாஹி லக்ஷ்மீ (நாராயண )

### அநுபல்லவி

வாராமீச்வர மஞ்ஜுள தல்ப
வனமாலாதர மாதவ லக்ஷ்மீ (நாராயண)

### சரணம்

மங்களகர கருணாகர சௌரே
வனருஹ பதயுக தீனசரண்ய
ரங்கபுர ரமண ஸாமஜ வரத
ராமதாஸநுத ஸ்ரீதர லக்ஷ்மீ (நாராயண)

## 36. ராகம் - பூரிகல்யாணி  தாளம் - திரிபுட

### பல்லவி

க்ஷீரஸாகர சாயி நின்
திருவடி பஜனமே ஜீவாதாரம் (க்ஷீரஸாகர)

### அநுபல்லவி

ஸ்ரீரமை மணவாள தயாகர
நின்னை நம்பின எங்களைக் காத்தருள் (க்ஷீரஸாகர)

### சரணம்

உன தருளின்றி யோர் அணுவும் அசையுமோ
உலகில் சராசர உயிர்களுக் கெல்லாம்
உன தருளின்றி இன்பமு முண்டோ
ஓஜகந் நாதா தீன சரண்யனே (க்ஷீரஸாகர)

## 37. ராகம் - சக்ரவாகம் தாளம் - ஆதி

### பல்லவி

உன்னை நினைந்து நினைந்து
உருகுகின்ருள் ஓர் மடந்தை (உன்னை)

### அநுபல்லவி

தன்னை உனக்கே தந்தாள் வந்தாள்
அந்திபகலும் வெகு ஸ்வந்தமுடன் மனதில் (உன்னை)

### சரணம்

ஓ கஜரக்ஷக வானவர்க்காக
மோஹினி வடிவுகொள் தானவ கால
யோகிய ருள்ளம்வளர் தாமரைப் பாதா
ஊணுறக்கமுந் துறந்தாள் அறிவிழந்தாள் (உன்னை)

38. ராகம் - காம்போதி தாளம் - ஆதி

பல்லவி

உண்டென்று நம்பு உல
குயிர்களெல்லாம் காத்தருளும் தெய்வம் ஒன்று (உண்டென்று)

அநுபல்லவி

அண்ட பிண்ட மெதிலும் நிறைந்தருளும்
அண்டர் முனிவர் பணியும் பரதெய்வம் (உண்டென்று)

சரணம்

அன்பர் மனம்வளர் அம்புஜ பாதன்
அன்பு மயமான திருமகள் நாதன்
ஆனந்தன் வைகுந்த விநோதன்
ஆதி யந்த மில்லா நாராயணன் (உண்டென்று)

39. ராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

பல்லவி

கஞ்ச மலரடி தஞ்ச மடைந்தேன்
கண் பார்த்தருள் ஐயா - மெய்யாக நின் (கஞ்ஜ)

### அனுபல்லவி

அஞ்ஜனா வண்ணா அம்புஜக் கண்ணா
அச்யுதானந்த கோவிந்த முகுந்தா நின் (கஞ்ஜ)

### சரணம்

வந்தாண்டருள் அன்பர் சிந்தாமணே - அ-
னந்தா முராரே பரந் தாமனே
ப்ருந்தாவன சரார விந்தானன
நந்தாத்மஜா எனைப்புரந்தாள் ருக்மிணீ மனோஹர நின் (கஞ்ஜ)

## 40. ராகம் - பைரவி தாளம் - ஆதி

### பல்லவி

அத்தருணம் அபயங் கொடுத்தாண்
டருள்வாய் என் அம்மை யப்பா!

### அநுபல்லவி

பக்தபரி பாலகனே பரந் தாமனே
பாற்கடலில் பள்ளிகொண்ட பத்மநாபனே இரங்கி

(சிட்டா ஸ்வரம்)

ஸா - நிதப மக ம நிதப மக ரிஸ
ரீ - நிஸ கரிக மப ரீக மப தநி
ஸா - ரிக ம ரிக ஸரீ நிஸ பத மப
கா - ரிஸ நி ரீஸ ஸநி தப மப தநி (அத்தருணம்)

சரணம்

உத்தமப் பிறவி யளித்தாய் - ஊனமில்லாத
உடலும் அறிவும் கொடுத்தாய் - என் -
எந்தனையும் நன்றி இல்லேனே - பரந்த அருள்
அந்தனையும் நான் மறந்தேனே
பக்தியும் இல்லையே - சித்த சுத்தியும் இல்லாக் கொடிய
பாவியாலும் உடல்விட் டாவி பிரியத் துடிக்கும் (அத்தருணம்)

1. ராகம் - லதாங்கி தாளம் - ரூபகம்

பல்லவி

ஸகலலோக நாயகனே - ஸ்ரீநிவாஸனே
சந்த்ரவதன சுந்தரதன மந்தஹாஸனே

### அநுபல்லவி

மகரகுண்டலம் - மணி கௌஸ்துப - கனக அம்பரம்
மனமோஹன கனச்யாமள
வடிவமுடனே அடியவர்க் கருள்தரும் (ஸகல)

### சரணம்

நானுனை மறந்தவல மானேன் - நாராயணா -
கருணாநிதி கமலாபதி - வைகுண்டபதி நீகதி
தீனசரண்ய ப்ரபோ திருவுள்ள மிரங்கி என்
பிழை பொறுத்து வரமளிக்க -
வந்தாய் ஸுரர் பணி வரதனே (ஸகல)



42. ராகம் - பரசு தாளம் - ஆதி

### பல்லவி

வாவா மதிவதனனே - மது
ஸூதனனே மதன ஸுந்தரனே (வாவா)

### அநுபல்லவி

தேவாதி தேவா ஜகன்மோஹன
ச்ருங்கார நடையுடனே என்னிரு கண்குளிர (வாவா)

### சரணம்

முரளீதர நந்தகுமார - நினைந்
துருகு மெனைக் கண் பாராய்
இருவினை இருள்பறந் தோடவும் நீ
என்னோடு கலந்து விளையாடவும் கனிந்து (வாவா)

## 43. ராகம் - ரீதிகௌளை தாளம் - ஆதி

### பல்லவி

பேரானந்தம் காண் - ஹரி பஜனம் (பேரானந்தம்)

### அநுபல்லவி

ஆராவமுதனை பஜித்தால்
ஆதி வ்யாதிகள் தீரும் பாரினில் (பேரானந்தம்]

### சரணங்கள்

1. நாரதர் முதல் முனிவோரும் - ஸன
காதியரும் எந்நேரமும் துதிக்கும் (பேரானந்தம்)
2. அஷ்ட ஸித்தியும் கைகூடும் - ஸக
லேஷ்ட ஸித்திதரும் திவ்ய நாமமே (பேரானந்தம்)
3. வாஸவன் அயனும் பஜிக்கும் ராம
தாஸன்மனம் இனிக்கும் வாழ்வில் மகிழ்வளிக்கும் (பேரானந்தம்)

44. ராகம் - கல்யாணி தாளம் - திரிபுட

பல்லவி

கமல மலரிதழ் பழிக்கும் இருவிழிகள்
கழல்பணியும் அன்பர்கள்
கவலையற அருள்மழை பொழியும் முகிலே
கல்யாண குணநிதி - (கமலமலர்)

அநுபல்லவி

கமலமலர் வளர்திருவை மார்பினில்
காதலுடன் வைத்த திருமால் விரி (கமலமலர்)

சரணம்

சங்க சக்ரமொ டபயமும் கதையும்
தாங்கும் நான்கு புஜங்களும் - பத
பங்கஜமும் பீதாம்பரமும் உயர்
பச்சைமுகில் உடலழகும் - விகஸித (கமலமலர்)

45. ராகம் - ஸஹாநா தாளம் - ஆதி

பல்லவி

கதிநீயே நாயேனுன் அடிமை ஐயா - என்னைக்
கைதூக்கி ஆளல் உன்கடமை ஐயா - என் (கதிநீ)

## அநுபல்லவி

நதியில் சிறந்த தெய்வநதியாம் காவிரி ரண்டின்
நடுவில் திருவரங்கப் பதிவாழ் நாரணு என்றன்

## (சிட்டா ஸ்வரம்)

நிஸாரீ, ரிக ரிக ம ரிகம பம க மாரீ பம கமரி கரீ ஸநி ரி
ஸரி கம பம தப மகம ரிப மபா ரிரீ நீ தப நித பம கக மரிஸ
ஸஸா பபா மமா தநா நிஸ தநி தபா தப தப மத நிஸ நிஸா நி
ரீ கம ப ரிப மக மரி கரி ஸநிஸ ரிக மப தநீ தப மக மரி கரிஸ (கதிநீ)

## சரணம்

கொடுமை கர்பவாஸமும் நரகமுமே - மிகக்
கொடுமை நாளைவரும் மரண பயமே
இடையில் இடிகரையின் வாழ்வோ பயங்கரமே
எதற்கென் றஞ்சியழுவேன் அரங்கா மனம் இரங்காய் (கதிநீ)

## 46. ராகம் - சக்ரவாகம் தாளம் - ஆதி

## பல்லவி

ரங்கனைத் துதிப்போர்க் இடரேது - அந்த
ரங்க பக்தியுடன் - இரவும் பகலும் மறவாது பாண்டு (ரங்கனை)

### அநுபல்லவி

மங்களமே தருவான் - ஸகல ஜகன்
மண்டலரும் உயர் விண்டலரும் பணி
முண்டக பாதனை பண்டரி நாதனை (ரங்கனை)

### சரணம்

தந்தையைப்போல் பொருள் எல்லாந் தருவான்
தாயெனப் பரிந்தெடுத் தணைக்கவும் வருவான்
சிந்தை கலங்கிக் கதறும் கஜராஜன்
செப்பியமெய் ப்ரணவப் பொருளாய் ஒளிர்
சக்ரா யுதனுய் வந்தாண்ட பாண்டு (ரங்கனை)

## 47. ராகம் - கல்யாணி தாளம் - சாபு

### பல்லவி

என்னைச் சோதனை செய்யாதே - ரங்கா - ப்ரபுவே
என்னைச் ,, ,, தே - உள்ளம் இரங்கி
என்னைத் தாங்கிக்கொள் இப்போதே.

### அநுபல்லவி

உன்னைப் பிரிந்தால் எனக் கெங்கே சென்றாலும் தொல்லை
உன்றன் துணையில்லாமல் எனக்கெங்கும் இன்பமில்லை (என்னை)

### சரணம்

அன்பர்க் கருளும் கண்யன் - தீன சரண்யன்
அபயந் தரும் லாவண்யன்
உன்போல் தெய்வம் வேறுண்டோ அன்பால் நான் மறந்தாலும்
என் பிழையைப் பாராட்டித் துன்பச் சுழலில் மாட்டி (என்னை)

## 48. ராகம் - பிலஹரி தாளம் - ரூபகம்

### பல்லவி

ஜயவிடல ஜயவிடல ஜய ஜய ரக்கு மாயீ (ஜயவிடல)

### அநுபல்லவி

தயாஸமுத்ர தேவகீபுத்ர - ஸரோஜ நேத்ரா - பரமபவித்ர (ஜயவிடல)

### சரணம்

பாத கமலம் பணியும் அன்பர் பவ நாசனனே
மாதவனே ஸ்ரீ தரனே - மாரமண கேசவனே (ஜயவிடல)

49. ராகம் - பந்துவராளி          தாளம் - திச்ர ஏகம்

## கண்ணிகள்

இந்த்ர ஜாலவித்தைக் காரன் - உலகமெலாம்
ஆட்டிவைக்கும் ஸூத்ரதாரன்.

1. இன்பமுடன் துன்பம் மாறி
மாறிக் காட்டுவான்
இருளும் ஒளியும் சுழலும் வெட்ட
வெளியைக் காட்டுவான்

அன்புருவாய் அன்பர் மனந்
தன்னிலாடுவான்
அன்பர் துன்பம் கண்டுபொறு
ரங்கவிடோபா - அவன் (இந்த்ர ஜால)

2. களங்கமிலாத் தண்ணீர்போலக்
கண்ணுக்குத் தோணும் - அதில்
காலை விட்டா லெடுக்க நம்மால்
முடியாதுங்காணும்

இளமையில் மனங் கவரும் அழகு
எதிலுமுண்டாமே - அதுவே
எலும்புந் தோலுமானபின்பு
பயங்கரமாமே இவ்விதம் - (இந்த்ர ஜால)

3. நல்லவர் போல் நம்மைச் சுற்றும்
கொடியவருண்டு
நல்லவர் பலர் பகைவர்போலக்
காண்பது முண்டு

எல்லாம் அரங்கன் அருள் விலாஸ
நாடகமேடை
எதிலும் மயங்காதவர்க்குப்
பேரின்பவீடே அருளும் (இந்த்ரஜால)

50. ராகம் - ஹம்ஸநாதம் தாளம் - ஆதி

பல்லவி

நீயே பராமுகமாயின் ஜகந்தனில்
நாயேன் கதி ஏதையா - பாண்டுரங்கா (நீயே)

பல்லவி

தாயே மகவை மறந்தால் என்ன செய்வது
சரணம் சரணம் எனக் கதறும் அடிமையிடம் (நீயே)

### சரணம்

பாரில் பிறந்த உயிர்க்கெல்லாம் சிறந்த உயர்
பகுத்தறிவுள்ள நர ஜன்மம் தந்தாய் - இதிலும்
தீராக்கவலே ஸம்ஸார விலங்கை மாட்டித்
திகைக்கச் செய்தாய் எனக்குத் தாயும் தந்தையுமான (நீயே)

## 51. ராகம் - குந்தலவராளி தாளம் - ஆதி

### பல்லவி

கருணாநிதியே கடைக்கண் பாராய்
கமலாபதியே அருள்நீ கதியே (கருணா)

### அநுபல்லவி

பரமாத்மா நீயே பண்டரி நாதா
பாபஸம்ஹாரா பாண்டு ரங்கா (கருணா)

### சரணம்

பூவிலயன் முதல் தேவர் முனிவரும்
பூமியும் வந்து வணங்க அருளுடன்
பூவில் யசோதையும் நந்தனுமின்புற
பூதனே பாலுடன் ஆவியுறிஞ்சிய

தேவகி ஸ்ரீ வஸுதேவ குமாரா
ஸ்ரீ தர ருக்மிணி தேவி மணாளா
தேவர்கள் வெந்துயர் தீர்த்த தயாளா
தீனதயாபர எங்களை ஆளாய் ஸ்ரீ (கருணை)

52. ராகம் - காம்போதி தாளம் - ஆதி

பல்லவி

புவனபதி ப்ரபோ பாண்டுரங்கா
பரமபுருஷன் உனை நான் மறவேன் - ஜய (புவன)

அநுபல்லவி

அவனி வாழ்வில் நின் திருவருளின்றி
ஒரு சுவை அழகில்லையே என்நாதா - (புவன)

சரணம்

மாதா பிதா இன்ப மனையாளும் நீ
மைந்தர் உடல் பொருளும் என் தெய்வம் நீ - உன்
பாதாம் புஜத் தொண்டும் நாம பஜனமும்
பிறவிதோறும் இருந்தால் போதும் ஸகல (புவனபதி)

## 53. ராகம் - ஸாரமதி　　　தாளம் - ஆதி

### பல்லவி

உன்னையலால் ஒரு துரும்பசையுமோ
ஓ பாண்டுரங்கா - உலகிலே　　(உன்னையலால்)

### அநுபல்லவி

வினையென்ற பெயரால் மலைபோலும் துன்ப
வெயிலில் வாட்டுவதும் உன் விளையாட்டு　　(உன்னையலால்)

### சரணம்

1. இரங்கி மனங்கனிந்து அன்னைபோல் பரிந்து
இன்பத் தாலாட்டுவதும் உன் அருள் ரங்கா　　(உன்னையலால்)

2. மாயாவதாரப்ரபோ - உன்னை மறவாத பாக்ய மிருந்தால்
மாய இன்ப துன்பங்கள் என்னை என்ன செய்யும் -
வரதா - ஜயமாதவனே　　(உன்னையலால்)

## ஸ்ரீராம ஸ்துதிகள்

54. ராகம் - மாண்டு     தாளம் - ஆதி

### பல்லவி

ராமனைப் பஜித்தால் நோய்வினை தீரும்
வீண் - சஞ்சலம் அகன்றிடுமே ஸீதா (ராமனை)

### அநுபல்லவி

ராமனைக் கண்ணாரக் காண்போம் இன்றே
பிறந்தபயன் அடைவோம், (ராமனை)

### சரணம்

துன்பமொடின்பம் கலந்தது ப்ரபஞ்சம்
வெயிலில்லையேல் நிழலில் இன்பமு முண்டோ
துயரில்லையேல் ஐயனை நினைப்பாருண்டோ
சோதனைத் தீயில் புடமிடுவான் - இரங்கித்
தூக்கி யெடுத் தானந்தம் அளித்திடுவான் - அவன்
நாமாம்ருதம் பிணிக்கு திவ்யௌஷதம்
ஜயராம் ராம் ராம் ஸீதாராம் ராம் ராம். (ராமனை)

55. ராகம் – மாயா மாளவகௌள. தாளம் – ஆதி

### பல்லவி

மஹிமையறியத் தரமா - ராமா - என்பிழை
மன்னிப்பதோர் பாரமா - மறை புகழும் நின் (மஹிமை)

### அநுபல்லவி

ஸகல ஜகன் நாதா யுகப்ரளயத்திலும்
ஸாது ஜனங்கள் ஸதா பஜிக்கும் திருநாம (மஹிமை)

### சரணம்

காகாஸுரன் கொடும்
பிழை நினைந்தொரு புல்லை - வெங்

கணையெனத் தொடுத்தாய் ஈரே
ழுலகிலோர் புகலின்றி

காகா தயாகரா
ஸீதாமனோஹரா - எனக்

கதற இரங்கியொரு
கண்ணும் உயிரும் தந்தாய் நின் (மஹிமை)

56. ராகம் - நடபைரவி தாளம் - ஆதி

பல்லவி

பஜனைசெய்வோம் - வருவீர் - ராம (பஜனை)

அநுபல்லவி

நிஜஸுகம் வேண்டின் நெஞ்சந்தனிலே
நிர்மலமெய்யன்புடனே - ராம (பஜனை)

சரணங்கள்

1 பொருளொன்றே பல பெயர் கொண்டாலும்
பொதுவாம் தெய்வமு மொன்றே என் ராம (பஜனை)

2. ஸகலவுயிர்க்கும் அவன் தந்தையைப் போன்றவன்
ஜாதியதம் முதல் உபாதியறியான் - ஸீதாராம (பஜனை)

தேவிஸ்துதிகள்

57. ராகம் - ஸாவேரி தாளம் - ஆதி

பல்லவி

சாமுண்டேச்வரி சங்கரி - சந்த்ர சூடா ஸஹசரி கருணாகரி (சாமுண்)

## அநுபல்லவி

ஸ்ரீ முண்டகாத்யுபநிஷத் ப்ரதி
பாதிதவித்யா ரூபிணி சித்ரூபிணி
க்ஷேமங்கர தசகர ஸரோஜினி
ஸ்ரீகர நவராத்திரி மஹோத்ஸவ
கோலாஹல மிளித புவனப்ரஸாதினி (சாமுண்)

## சரணம்

ச்யாமளே மஹீஸூர புரவாஸினி
ச்யாமக்ருஷ்ண பகினி மந்தஹாஸினி

கோமளாங்கி புக்தி முக்திதாயினி
குபதிநுதே ஸ்ரீநுதே (அ) னபாயினி

காமமதாத்யரி குலார்திதம் மாம்
காத்யாயனி பாஹி பக்த பாலினி

ராமதாஸ வந்திதே ஸூரஹிதே ராகாசசி வதனே ஸூமஹிதே
ரக்ஷித நிஜபக்த ஜனஸமூஹே

ராஜிதேக்ஷு பாணஸன பாஹே
யக்ஷராஜவிநுதே ஹரிவாஹே
யதிஜன நிர்மல மானஸ தேஹே (சாமுண்)

58. ராகம் - காமவர்தனி தாளம் - ஆதி

## பல்லவி

அம்பா! மனங்கனிந்துனது கடைக்
கண்பார் - திருவடியிணை துணையென (அம்பா!)

## அநுபல்லவி

வெம்பவ நோயற அன்பர் தமக்கருள்
கதம்பவனக் குயிலே சங்கரி ஜக (அம்பா!)

## சரணம்

பைந்தமிழ் மலர்ப் பாமாலை சூடியுன்
பாதமலர் பணிந்து பாடவும் வேண்டும்

சிந்தையும் என் நாவு மெந்நேரமுநின்
திருப்பெயர் புகழ் மறவாமையும் வேண்டும்

பந்த வுலகில் மதிமயங்கி அறுபகைவர்
வசமாய் அழியாமல் அருள்பெற வேண்டும்

இந்த வரந் தருவாய் ஜகதீச்வரி
என்றன் அன்னையே அகிலாண்ட நாயகி என் (அம்பா!)

59. ராகம் - லதாங்கி தாளம் - ரூபகம்

பல்லவி

ஸ்ரீ ஜகதம்பிகையே
தீன தயாபரி சங்கரி (ஸ்ரீ ஜக)

அநுபல்லவி

ஓ ஜனனி! நீயே
அபயம் சரணுன் உபயசரணம் (ஸ்ரீ ஜக)

சரணம்

பாரினில் பொருளும் உறவும்
பந்தவுடலும் சாச்வதமோ
யார் துணை என் அம்பா கடைக் கண்பார் பகவதி (ஸ்ரீ ஜக)

60 ராகம் - ஹம்ஸத்வனி தாளம் - ஆதி

பல்லவி

பராசக்தி ஜனனி - எமைப்
பரிபாலனை புரி பர்வத குமாரி (பராசக்தி)

### அநுபல்லவி

ஸுராஸுரர் பணி ஸரோஜ சரணே
ஸுந்தரி நின்சரணாம்புஜம் நம்பினோம் (பராசக்தி)

### சரணங்கள்

1. சங்கரி க்ருபாகரிவரா
பயகரே எமையாதரி ஹரிஸோதரி (பராசக்தி)

2. தாயே பரசிவ ஜாயே மன இருள்
மாயையகல அருள்வாயே மாயே (பராசக்தி)

3. கோரமஹிஷ ஸம்ஹாரிணி ச்யாமள
ரூபிணி ஸிம்ஹவாஹனி மஹேச்வரி (பராசக்தி)

## 61. ராகம் - கானடா தாளம் - ஆதி

### பல்லவி

மாதா துணைபுரிவாய் - ஸ்ரீ ஜகன் (மாதா)

## அநுபல்லவி

மாதவ ஸோதரி மலையரசன் குமாரி
பாதம் நம்பினேன் அம்ப பார்வதி சங்கரி (மாதா)

## சரணம்

எத்தனை துன்பங்கள் வந்தாலும் - நின்
இன்பத் திருநாமம் சொல்லித் துதிக்கவும்

எத்தனை இன்பங்கள் நேர்ந்தாலும் என்
ஹ்ருதயம் உன் பூஜையை மறவாதிருக்கவும் (மாதா)

62. ராகம் - குந்தளவராளி தாளம் - ஆதி

## (பஜன்)

அமலே அமரர்கள் பணியும் அனகே
விமலேகாளி பராசக்தி

அருவே அடியவர்க்கருள் மெய்யுருவே
அபயந் தந்தருள் என்தாயே

அன்னையுன் பெருமையை அறியாப்பேதை
உன்னை என்னென்று புகழ்வேன் தேவி

ஜகதம்ப ஓ ஜகதம்பா
ஜகதம்பா - ஓ ஜகதம்பா.

## 63. ராகம் - பைரவி    தாளம் - ஆதி

### பல்லவி

தாயே நீயே தஞ்சம் அருள்
வாயே - தயை புரிந் தென் அருமைத்    (தாயே)

### அநுபல்லவி

மாயா இன்பமும் துன்பமும் நீயென
மனம் நினைந்துனைத் தினம் தொழும் எனது    (தாயே)

### சரணம்

நன்மையும் தீமையும் நின்னருள் தானே
நன்றெது தீதெது என்றறியேனே
கர்மம் ஜன்மமும் வேற நின்னருள்
கடைக்கண் நோக்கியென் இடுக்கண் தீர்த்தருள்    (தாயே)

## 64. ராகம் - பைரவி தாளம் - ஆதி

### பல்லவி

தாயே பைரவியே மாமாயே
தயாபரி கௌரி - சங்கரி (தாயே)

### அநுபல்லவி

நீ என் குலதெய்வம் வந்தாதரி
நின்பதம் நம்பினேன் நாரணன் ஸோதரி (தாயே)

### சரணம்

தாரணியில் ஜயமங்களமே தரும்
பூரணி அம்ப பவானி சராசர
காரணி காத்யாயனி கங்காநதி
நீரணி வேணியன் தேவி மனோன்மணி (தாயே)

## 65 ராகம் - ப்யாகடை தாளம் - ஆதி

### பல்லவி

சங்கரி தயாகரி
சரணம் நின் சரணம் - பைரவி சிவ (சங்கரி)

### அநுபல்லவி

எங்கும் நிறைபரிபூரணி நாரணி
எங்களையாள இரங்கி வந்தருள் சிவ (சங்கரி)

### சரணம்

சுபாகரி ஸௌர குலபாலினி அப
யபாணி அருள் தரும் ஸ்வபாவ கனிகர
சுபாலி வசிகர அபாங்கஸௌந்தரி
அபார அன்பர்கள் க்ருபா தரங்கிணி (சங்கரி)

[illegible]6. ராகம் - மணிரங்கு தாளம் - தேசாதி

### பல்லவி

பரதேவதே பதம் நம்பினேன்
பாரில் வேறுயாருமில்லை அம்பா (பரதேவதே)

### அநுபல்லவி

வரதாயகி ஜகன் நாயகி
எனை நோயறவே வந்தருள் தாயே (பரதேவதே)

## சரணம்

ஸுகதுக்கமெல்லாம் உன்னருள் தானே
ஸுஸ்வர நாத ஸங்கீத விநோதினி

ஸுகதுக்க மோடெது நேரினும்!
துணையுன் பஜன கானம்ருதமே (பரதேவதே

67. ராகம் - சாவேரி தாளம் - ஆதி

## பல்லவி

உனைத்தினம் பணிந்ததும் வீணோ தேவி
உமையே ஜகதம்ப - என்குழவிப் பருவம் முதல் (உனைத்)

## அநுபல்லவி

அனைத்துலகும் படைத்தளிக்கும் பராசக்தி
அனையே அனையே என்றுன்றனையே நினைந்து அந்திபகல் (உனைத்)

சரணம்

எத்தனை சோதனை செய்திடினும்
உனதடி மலரிணை விடுவேனோ
ஈச்வரி நின் அருளிருக்க என் மனம்
சஞ்சலப் படுவேனோ - நின்
சித்தமிரங்காதோ என்
சிந்தாகுலம் நீங்காதோ - நானுன்
சேயன்றோ - எவ்வுயிர்க்கும் நீயே
தாயன்றோ புவன ஸுந்தரி - நான் (உனை த்)



68. ராகம் - கன்னட தாளம் - ஆதி

## பல்லவி

மஹிஷாஸுர தமனி - ஜகதம்ப வரமருள் (மஹிஷா)

## அநுபல்லவி

ஸகலவுலகுயிரிலும் நிறைந்திருக்கும்
சக்திஸ்வரூபிணி ச்யாமளாங்கி ஜய ஜய (மஹிஷா)

### சரணம்

கலைமகள் திருமகள் மலைமகள் வடிவாய்
கருணையுடன் அடிபணியும் பக்தர்களின்
கலிதீர்க்கக் கொலுவிருக்கும் யோக
மாயே ராஜராஜேச்வரி அம்பிகே (மஹிஷா)

## பரம சிவஸ்துதிகள்

69. ராகம் - *பிலஹரி* தாளம் - ஆதி

### பல்லவி

ஐயா நின் அடைக்கலமே - அம்பிகைபாகா (ஐயா)

### அநுபல்லவி

மெய்யாய் உன்னைப் பஜிக்கும்
துய்யோருள்ளத் திருக்கும்
மெய்யா அஞ்சலென்றருட்
கையா கைலையமர்ந்த (ஐயா)

### சரணம்

தேவர்கட்குயர் தேவனே
ஹரனே - விரியுஞ் சராசரம்
யாவுமீன்ற தயாள சங்கரனே
தேவதேவ க்ருபாகரா - மிளிர்
திங்கள் சூடிய சேகரா - விதி
ஏவும் வெவ்வினையாகரன எனை
என்றுகொள் பவஸாகரத் திருந் (தையா)

## 70. ராகம் - கரஹரப்ரிய தாளம் - ஆதி

### பல்லவி

உன் பெருமையை எவர் அறிவார் ஈசா
உனதடிமை நான் ஹாலாஸ் யேசா (உன்பெருமை)

### அநுபல்லவி

என்பிழை பொறுத்தெனை ஆண்டருள் வரதா
இணையடிதொழும் அடியவர்க்கருள் விரதா (உன்பெருமை)

### சரணம்

மாமதுரைக் கதிபதியே அம்பிகை
மலையரசன் மகள் மருவும் பாகா
ஸோமகலாதர ஸுரர் தொழும்பாதா
ஸுந்தரேச மீனாக்ஷிநாதா (உன்பெருமை)

## 71. ராகம் - அஸாவேரி தாளம் - திரிபுட

### பல்லவி

அண்ணாமலைநாதா - இந்த
அடிமைக்கிரங்க வாதா - திரு (வண்ணாமலை)

### அநுபல்லவி

உண்ணாமுலை யுமையாளொரு
பாகா விடை வாகா
உயர் வெண்கயிலை நாதா - என
துள்ளம் வளர் மலர்ப்பாதா திரு (வண்ணாமலை)

### சரணம்

வான் மறந்தால் உலகில் உயிர்
வாழ்வதுண்டோ - இளங்குழவி
தான் மறந்தாலும் அனைக்கும்
தாய்மறந்தால் துணையுண்டோ

நான் மறந்தேன் என்செயலோ
நீ மறந்தால் என்செய்வேன்
நான்முகன் மால் தானறியா
நாயகன் நீயே புகல் திரு (வண்ணமலை)

72. ராகம் - பரசு  தாளம் - ஆதி

பல்லவி

ஓ சிவ பரம்பொருளே - நீயே துணை (ஓ சிவ)

அநுபல்லவி

ஈசா அடியார் மனப் பாச மறுத்துபவம்
எனும் கடலிலிருந்து கரைசேர்க்கும் அண்ணலே (ஓ சிவ)

சரணம்

தாவி உயரத் தூக்கும் சைலமசைய அஞ்சும்
தாயும் மனம்குளிர ஸாமகானம் புரியும்
ராவணனை வதைத்த ராமனும் பணிந்து
நிர்மாணஞ் செய்த பாவன ராமலிங்கமே ஜய (ஓ சிவ)

## 73. ராகம் - காமவர்தனி தாளம் - ரூபகம்

### பல்லவி

நின் அருள் இயம்பலாகுமோ - ஓ தேவா தேவா (நின் அருள்)

### அநுபல்லவி

பொன்னி நாதன் பூவில் வந்தோன்
போற்றும் கமலப் பூங்கழலோய்
மன்னும் ஆகம மறைகள் புகழ
மாட்டா அழல் நாட்டமுடையோய் (நின் அருள்)

### சரணங்கள்

1. இன்னல் கூட்டி இன்பமூட்டி
இந்த்ரஜால வித்தை காட்டி
தன்னை நம்பினோரை வீட்டில்
ஸதானந்த முழுக் காட்டும் (நின் அருள்)

2. அருளிலாமல் ராமதாஸன்
துயருறாமல் மகிழ்வதேது
அருளிலாமல் புகழ் சிறந்து
அகிலமீது வாழ்வதேது (நின் அருள்)

74. ராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

பல்லவி

பதிபதம் பணிவது நமது கடன்
பவமெனும் கொடும் வெயிலற நிழல்தரும் பசு (பதிபதம்)

அநுபல்லவி

துதிசெயும் அடியார் கதியெனும் கருணை
நிதிவிதியும் ரமாபதியும் தொழும் உமா (பதிபதம்)

சரணம்

அன்னமய கோச உடலெனும் கூண்டில்
மன்னும் உயிர்ப் பறவைதன்னைக் குறிவைத்து
தென்னவன் எனும் வேடன் தருணம் பார்த்திருக்கின்றான்
இன்னல் சூழும் பின்னல் வாழ்வு முடியுமுன் (பதிபதம்)

75. ராகம் - கமாஸ் தாளம் - ஆதி

பல்லவி

தாயுமானவனே - தந்தையும் தாயுமானவனே

### அநுபல்லவி

ஆயும் மறைகளும் மாயனொடயனும்
அடிமுடி தொடர் வரும்
அருளுருவொடு திரி சிரகிரிதனில் வளர்திருத் (தாயுமான)

### சரணம்

தனக்குயர் வொப்பில்லை யென்
றனைத்துல குணர்த்தவோ
தனை யடைவோர்க்குத் தரும்
பதத்தை வுணர்த்தவோ

மனத்திற் கெட்டாத உயர்
மலைத்தலை வீற்றிருப்ப
மண்ணில் - அன்றைக்கொர் துணையற்ற
கன்றுப் பருவமுற்ற பன்றிக் குருளைகட்கும் (தாயுமான)

## 76. ராகம் - சுருட்டி தாளம் - ஆதி

### பல்லவி

சிவபெருமான் க்ருபை வேண்டும் - அவன்
திருவருள் பெற வேண்டும் - வேறென்ன வேண்டும் (சிவபெருமான்)

### அநுபல்லவி

அவலப் பிறப்பொழிய வேண்டும் - அதற்குவித்தாம்
அவமாயை அகல வேண்டும் - வேறென்ன வேண்டும் (சிவபெருமான்)

### சரணங்கள்

1. தொல்லுலகில் நரரும் எல்லாவுயிரும் சாந்த
ஸுகவாழ்வு வாழ வேண்டும் - வேறென்ன வேண்டும் (சிவபெருமான்)

2. காமம் முதல் பகையும் குரங்கு மனமும் செத்து
ராமதாஸன் உய்ய வேண்டும் - வேறென்ன வேண்டும் (சிவபெருமான்)

## 77. ராகம் - ஹமீர் கல்யாணி    தாளம் - மிச்ரம்

### பல்லவி

நாதன் தாள் துணை
நம்மையெல்லாம் காக்கும் நடமிடத் தூக்கும் (நாதன்)

### அநுபல்லவி

மாதா பார்வதி மால் மற்றோர் துதி
முறையிடவுண்ட கறை விடக்கண்ட (நாதன்)

சரணம்

அன்னை தந்தை குரு எனும் இம் மூவர் கண்
கண்ட கடவுளர் - அவர்

மனம் வருந்தப் புன்னெறி புகுவது
நரகமீழ்த்தி விடும்

வினையுடல் மக்கள் மனைவியர் சுற்றம்
வினையற அகல்வார்

வீண் மனப்பற்று பிறவிக்கே வித்து
மெய்யுணர்ந்த கற்று

மின்னல் வாழ்நாள் இன்னல் காணும்
வெள்ளிமலை வளர் வள்ளல் மலைமகள் (நாதன்)

78. ராகம் - ஷண்முகப்ரிய  தாளம் - ஆதி

பல்லவி

பார்வதி நாயகனே சரணம்
பரமசிவா கருணாகர சம்போ (பார்வதி)

அநுபல்லவி

ஸார்வ பௌமனே சங்கரனே
கைலாஸ நாதனே சந்த்ரசேகரனே (பார்வதி)

சரணம்

நீ மறவாதென்னை யாள் ஜகதீசா
நின் திருநாமம் என் நா மறவாதே
தாய் மறவாள் இளஞ்சேய் மறந்தாலும்
தாரகம் வேறெவர் தீன தயாபர (பார்வதி)

79. ராகம் - பலஹம்ஸ தாளம் - ஆதி

பல்லவி

உன்னையலால் கதியார் உலகிலே
உன்னை நம்பினேன் சம்போபுராரே (உன்னை)

அநுபல்லவி

ஸனகாதி முனிவர் பூஜை செய்ய அருள்
சந்த்ர சேகரா கருணாஸாகர (உன்னையலால்;

### சரணம்

பகவன் பசுபதே பரமசிவ
பார்வதிபதே புவனபதே

குகன் யானை முகனை ஈன்றவ என் மனம்
கோவில் கொண்டவா கடைக்கண் பார்த்தருள் (உனையலால்)

### 80. ராகம் - லதாங்கி தாளம் - ஆதி

### பல்லவி

பிறவா வரம் தாரும் - பெம்மானே
பிறவா வரந்தாரும்

### அநுபல்லவி

பிறவா வரந்தாரும் இறைவா மறுபடி
பிறவா வரந்தாரும் பிறந்தாலு திருவடி
மறவா வரந்தாரும் மாநில மேலினிப் (பிறவாவரம்)

### சரணம்

பார்வதி நேயா பக்த ஸஹாயா
பந்தமருதா வந்தருள் தாதா
முந்தை வினைகோர சிந்தாகுலம் தீர
எந்தாயுன் பாதார விந்தம் துணைசேரப் (பிறவாவரம்)

### 81. ராகம் - செஞ்சுருட்டி தாளம் - ரூபகம்

### பல்லவி

தேவ தேவனைத் திருவடிபணிந்து பாடுவோம்

### அநுபல்லவி

செல்வமோடு போகமும் தரும் தயாளனும் - நமது (தேவ தேவனை)

### சரணங்கள்

1. சங்கட மறுமே ஜய மங்களம் தருமே
ஸாமகான லோலனை தாயுமை மணாளனை - உயர் (தேவ தேவனை)

2. அன்பு மிகுந்தோரே இன்பமடைந்தாரே
ஆருயிராய் ஆருயிர்கட் கன்புடன் இன்பமுமாகிய
,, ,, கன்னேயும் தந்தையுமாகிய (தேவ தேவனே)

82. ராகம் - பூரிகல்யாணி தாளம் - ஆதி

பல்லவி

பரதெய்வம் உனையன்றி உண்டோ
பவநோய்க்கு மருந்தே என்
துயர் தீர்க்கும் காருண்ய (பரதெய்வம்)

அநுபல்லவி

ஹரனே ஸதாசிவ பரனே வராபய
கரனே உமையாள் மணமகிழ் ஸங்
கரனே எமையாள் மறை புகழும் (பரதெய்வம்)

சரணம்

அடிமுடி யார் கண்டார் - ஆதிமத்
யாந்த ரஹித சம்போ - நாமமுடன்

வடிவமு மூனக்குண்டோ - மாலயனும்
வணங்கும் ஸ்வயம்போ
சடைமுடியணி கைலாஸ விஹாரா
சங்கர த்ரிபுர ஹரா நிர்விகாரா (பரதெய்வம்)

83 ராகம் - கல்யாணி தாளம் - ஆதி

பல்லவி

ஸௌந்தரேச்வரனே சுபகர
க்ருபாகடாக்ஷம் வைத்தெம்மை யாண்டருள் (ஸௌந்தரே)

அநுபல்லவி

சந்த்ரசேகர சங்கரா திரு
வாலவாய் அமர் ஸ்ரீ மீனாக்ஷி (ஸௌந்தரே)

சரணம்

பண் சுமந்த பாணர்போல் விறகுடன்
மண் சுமந்த திருமுடியழகா
பெண் செய் பிட்டு விரும்பி மாறன் பிரம்படிப்
புண் சுமந்த மேனியனே மாமதுரை (ஸௌந்தரே)

84. ராகம் - பூரிகல்யாணி தாளம் - ஆதி (கண்டநடை)

பல்லவி

நீலகண்டா நித்ய நிர்மல நிரஞ்ஜன
நீலகண்டா

அநுபல்லவி

ஆலமுண்டோய் அன்பனென்னை யாண்டவனே
திருமாலும் வேதன் தானுமறியாத பரனே (நீலகண்டா)

சரணம்

•பாம்பணிந்தோய் செம்பொனணியம்பலவனே
ஸாம்பமூர்த்தே ஸ்வாமி சிவகாமி மருவும் (நீலகண்டா)

85. ராகம் - தேவமனோஹரி தாளம் - தேசாதி

பல்லவி

கால் மாறியாடும் தயாநிதியே
கல்யாண ஸுந்தரனே சம்போ (கால்மாறு)

### அநுபல்லவி

நான்மாடக் கூடல் மதுரையழகா
நஞ்சணியும் மணிகண்டா தண்டைக் (கால்மாறி)

### சரணம்

கங்காதரனே கண் மூன்றுடையாய்
கடிமால் விடையாய் விரிசெஞ்ஜடையாய்
பங்கர்டும் மீனாக்ஷி மனோஹரா
பரனே எங்கள் குல தெய்வமே (கால்மாறி)

86. ராகம் - ச்லநாட்டை தாளம் - ரூபகம்

### பல்லவி

உமையோர் பாகனே திருவருள்புரி
உலகநாதனே - பரமசிவனே (உமையோர்)

### அநுபல்லவி

கமல பாதம் நான் மறவேன்
காமனை வென்றவனே - கரு - ணாகரனே சங்கரனே மங்களகரனே
(உமையோர்)

### சரணம்

மாத ருறவாய் மருவுகாதல் விளையாடாமல்
மாயை வசமாய் ஸம்ஸார வலையில் வீழ்ந்து வாடாமல்
போதமிழந்து புனிதனுனது புகழின் வேறுபாடாமல்
புண்ணிய யோகியர்போல் - உயர் -
துறவு நெறியில் உறுதிபெறவே
அறுபகையறவே பரிந்து கனிந்து (உமையோர்)

## நடராஜ கீர்த்தனங்கள்

87. ராகம் - கேதாரம் தாளம் - ரூபகம்

### பல்லவி

ஸகல புவன நாயகா நின்
தாள்பணிந்த என்றனைக் காத்தருள் (ஸகல)

### அநுபல்லவி

புகலறியேன் கடல்சூழும்
புவிமீது சிவனே (ஸகல)

### சரணம்

நிதமும் உலகு சதமென நினைந்து
நெறிபிறழ்ந்து உழன்றேன்
சிதம்பரம் வளர் பொன்னம்பலவாணா
சிவகாமி ரமணா (ஸகல)

## 88. ராகம் - கேதாரகௌளம் தாளம் - ஆதி

### பல்லவி

ஆனந்த நடமிடும் பாதன் - பொன்
னம்பலவாணன் சிதம்பரநாதன் (ஆனந்த)

### அநுபல்லவி

கானந்தனைத் தொடர்ந்து
ஞானந்தரும் பேரின்ப
மோனந் தழைக்கும் யோக
வானந் தனில் மகிழ்ந்து

## சிட்டாஸ்வரம்

ஸாரிஸ நிதபம பநித பநிதபா
மபமக ரிகஸா ரிரிமம பபநிநி

ஸாரிகரி மகரி ஸரி ஸாநித - பத
மாபநி - ஸநிஸா ஸரி - மப நீ ஸரி (ஆனந்த)

## சரணம்

மானும் மழுவும் டமருகமும் அரவும் - திரு
வரதாபய கரமும் சரணம்புஜமும் - புலி

தானும் பதஞ்ஜலியும் பணிய அயனும் மாலும்
தாளம் மத்தளங் கொட்டச் சிலம்பும் குலுங்க இன்பத்

தத்தை மொழிச் சிவகாமி மணாளன்
ஸத்வகுணன் பதி நான்குல காளன்

தத்வமஸிப் பொருளாய தயாளன்
ஸதாநிஜ அன்பர் வணங்கு தாளன்

தத்தரி கிடதிமி ஜணுத ஜணுத தீம்
தக ததிங் கிணதோம் ஜணு ஜண ஜணவென

பக்தர்கள் முனிவர்கள் இமையோர்களும் - புகழ்
பாடவும் புனல்சேர் சடைமதி யாடவும் (ஆனந்த)

89. ராகம் - ஸாரங்க        தாளம் - திரிபுட

### பல்லவி

ஞானஸபையில் தில்லைக் கானந்தனில் நின்றாடும்
ஆனந்த நடராஜனே!

ஹர ஹர என வரமுனிவரும் அமரரும் புகழ் - பர
மானந்த நடராஜனே        (ஞான)

### அநுபல்லவி

மானும் மழுவும் பிஞ்சு மதியும் நதியும் தவழ் செவ்
வானம் நிகர் சடையாட இளநகை
தவழும் மதி முகமும் திருவிழி யழகுமாய்        (ஞானஸபை)

### சரணம்

நேமியுடன் முழங்காழியணி
சாரங்கபாணி ம்ருதங்கமும்

நிஸதநிபமரிக மரிஸாஸ்வர
நாத நாரதர் வீணையும்

ஸாமகான விநோதனே - சிவ
காம ஸௌந்தரி நாதனே
ஸ்வாமி அடிமையை யாள் ஸகல ஜகன்
நாதனே பாதமே தீம் ததீம் இசையுடன் (ஞான ஸபை)

## 90. ராகம் - காம்போதி தாளம் - ஆதி

### பல்லவி

ஆடும் தெய்வம் நீ அருள்வாய் - இடதுபாதம் தூக்கி (ஆடும்)

### அநுபல்லவி

நாடும் அடியர் பிறவித் துயரற
வீடும் தரும் கருணை நிதியே நடம் (ஆடும்)

### சரணம்

சுபஞ்சேர் காளியுடனாடிப் படு
தோல்வியஞ்சித் திருச்செவியிலணிந்த - மணித்
தோடு விழுந்ததாக மாயங்காட்டிடும்
தொழும் பதம் உயரத்தூக்கியும் - விரி

ப்ரபஞ்சம் முழுதும் ஆட்டும் நின் திருப்
பதம் தஞ்சம் என உனை யடைந்தேன்
பரிந்தென் திண்டாட்டம் கண்டு பரிசு
தரும் துரையே ஸபை நடுவில் தத்திமி என்று (ஆடும்)

## 91. ராகம் - ஹேமவதி தாளம் - ஆதி

### பல்லவி

சிதம்பர நாதா திருவருள் தாதா நின்
சித்த மிரங்காதா - திருவடியல தொரு துணையில்லை (சிதம்பர)

### அநுபல்லவி

பதஞ்சலியும் புலியும் பணியும்
குஞ்சித பதனே ஸஞ்சித மகலாதா (சிதம்பர)

### சரணம்

நன்று தீதும் அறியேன் நொந்தேனே
ஞானமிலேன் உனை நம்பி வந்தேனே
மன்றி லாடும் மணியே செழுந்தேனே
வாதா அறுபகைத் தீயில் வெந்தேனே (சிதம்பர)

## 92. ராகம் - ஸ்ரீரஞ்ஜனி தாளம் - திச்ரஏகம்

### பல்லவி

காணவேண்டாமோ - இரு
கண்ணிருக்கும் போதே விண்ணுயர் கோபுரம் (காண)

### அநுபல்லவி

வீணில் உலகைச் சுற்றிச் சுற்றிவந்தால்
மேதினிபோற்றும் சிதம்பரத் தேவனைக் (காண)

### சரணங்கள்

1. ஓட்டைச் சடலம் ஒடுங்க வெற்றெலும்புக்
கூட்டிலிருந்துயிர் ஓட்டம் பிடிக்கும்முன் (காண)
2. வையயதிலே கருப் பையில் கிடந்துள்ளம்
நையப் பிறவாமல் ஐயன் திருநடம் (காண)

## 93. ராகம் - காபி தாளம் - ரூபகம்

### பல்லவி

கனகஸபையைக் கண்ட பிறகோர்
காக்ஷியு முண்டோ (கனக)

## அநுபல்லவி

சிவ - காமிநேசன் நடராஜன்
திருநடம்புரி சிதம்பரம் சென்று (கனகஸபை)

## சரணம்

பாம்பு புலியும் ஆனந்த வெள்ளம் அமிழ்ந்து குளிக்க
பங்கஜன் மாலின் தாளம் மத்தளம் முழங்க பார்வதி
பக்கம் நின்று கண்டு மகிழ பக்தர்கள் முனிவர்களிக்க
பவநோய் மருந்து குஞ்சிதபதம் தந்தோம் தந்தோமென்றாடும் (கனக)

## 94. ராகம் – மத்யமாவதி தாளம் – ஆதி

## பல்லவி

அத்புத லீலைகளை யாரறிவார்
அகிலாண்ட நாயகனே - ஹரனே உன்றன் (அத்புத)

## அநுபல்லவி

சித்பரனே சிவனே உனதடியார்
செய் பிழைகள் பொறுத்தருளும் என
தையனே திரு அபயவரக் கையனுன் (அத்புத)

சரணம்

பாட்டிலாசையால் அன்று பரவைமனை
தூது நடந்தவா விறகு சுமந்தவா
மாட்டுடையாய் தில்லைக் காட்டினிலே அரு
ளாட்டுடையாய் தலையோட்டுடையாய் - உனைக்

திச்ரம்

காட்டி மறைப்பாய் எனையாட்டியலைப்பாய் என்
பிராட்டியுடனென் வாட்டமற - இன்பம்
ஊட்டுவை துன்பம் ஓட்டுவை - உன்றன் (அத்புத)

95. ராகம் - காம்போதி தாளம் - ஆதி

பல்லவி

ஆனந்தமே பரமானந்தமே
ஐயன் அபயவரக்கையன் திருநடனம் (ஆனந்தமே

அநுபல்லவி

மாநிலத்தில் ஸகல ஜீவனும் உய்ய மக்கள்
ஊனக் கண்கள் அம்ருத பானஞ் செய்யக் கிடைத்த

## சிட்டாஸ்வரம்

பா, பா, பதரி ஸநித ப ம க ரி ஸா, ஸா, ஸநி நிதப ம பம கம
பா த நித மபத பதஸ காரீ ஸநி த ரீ ஸா நிதப மா பா மகம (ஆனந்த)

## சரணம்

பாதி மதியும் ப்ரபாகர வடிவம்
பால் நிறமும் தவழ் பார்வதி மகிழ் - க்ரு
பா நிதி பொன்னம்பலத்தாடும் - ஸ
பாபதி மதுரை வெள்ளி யம்பலந்தனில்
தீம் தித் தளாங்கு தகஜணு தோம், தகஜணுத திமி தகிட
ஜணகு தணகு தத்வம் என்ற ஜங்காரமும் - டு டு குடகு
டும், டும், டும் என்ற உடுக்கையின் ஓங்கா ர மும் - தன்
பத யுகளச் செந்தாமரை பணிவர்
சிந்தாகுல மகலத்
தந்தோம் பதவியெனும் (ஆனந்த)

## 96. ராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி

## பல்லவி

பதி அவனே உலகம் பதிநான்கின்
பதி அவனே உமைபாகம் பிரியாத (பதி அவனே)

### அநுபல்லவி

பதியுடன்மால் உயர் விண்ணெடு மண்ணும்
வியந்தடி முடிதேடி அயர்ந்திட வளர்ந்த நம் (பதி அவனே)

### சரணம்

தந்தையுந் தாயுமிலாத் தனித்தெய்வம்
ஸச்சிதானந்த வடிவமாம் தெய்வம்
ஸகல ஜீவகோடிகளை ஆட்டிவைத்துத்
தானும் ஆனந்த நடமாடும் - பசு (பதி அவனே)

## 97. ராகம் - ஹரிகாம்போதி தாளம் - ஆதி

### பல்லவி

கைலாஸபதியே கருணை புரிவாய் முக்
கண்ணுடையாய் விரிசெஞ்ஜடையாய் (கைலாஸ)

### அநுபல்லவி

சைலேந்த்ர குமாரி மனோ ஹரனே சிவ
சங்கரனே சந்த்ரசேகரனே (கைலாஸ)

சரணம்

சம்போத்ரி புராந் தகனே
லம்போதரன் ஜனகனே - ஸ்வ
யம்புவாம் அனகனே
ஸகல லோக நாயகனே (கைலாஸ)

## பொதுஸ்துதிகள்

98. ராகம் - ஹிந்தோளம் தாளம் - ரூபகம்

பல்லவி

மாரமணன் உமாரமணன்
மலரடிபணி மனமே தினமே (மாரமணன்)

அநுபல்லவி

மார ஜனகன் குமார ஜனகன்
மலைமேலுறைறவன், பாற்கடல்
அலைமேல் துயில்பவன் பாவன

## சிட்டாஸ்வரம்

மாநிதமக தமகஸ நித மாதம நிதஸநி கஸமக
மாகஸ நிஸ தநிஸா கஸ மாகமதநி தம கஸமக
மாதநித தநித மகமத மாநி நி தத நிக மதநிஸ
மாகஸ மகம் கஸநிநிஸ மாகஸ நித மா கஸநிஸ (மாரமணன்)

## சரணம்

ஆயிரம் பெயரால் அழைப்பினும்
ஆயிரம் உருமாறினும் உயர்
தாயின் மிகு தயாபரன் பதம்
தஞ்சமென்பவரை அஞ்சலென்றருளும் (மாரமணன்)

## 99. ராகம் - பிஹாக் தாளம் - ஆதி

## பல்லவி

ஸாரஸப் பூம்பாதம் பணிவோம் - ஸம்
ஸார வெந்தாபந்தான் தணிவோமே (ஸாரஸ)

## அநுபல்லவி

நீரஸ விஷய விஷந்தனையுண்டு
நிலையிலாத உலக இன்பமே - பெரி
தென்று நினைந்து மகிழ்ந்தது போதுமே

## சிட்டாஸ்வரம்

ஸாரி ஸநி த பா ம க ம ப கம கரிஸ
நிஸக ம பா கமப நித நிஸா - நி

ஸ க ரி ம க ரி ஸ நிரிஸ நிஸ நித பம
நிரி நிதபா - மகா மகா மபா - நி

(ஸாரஸ)

## சரணம்

அங்கு மிங்கும் எங்குமே நிறைந்தவன்
அன்பிலார்க்கு இல்லாது மறைந்தவன்

அகில உல குயிரும் படைத் தளித் தழிப்பவன்
அனைத்துயிர்க்கும் அன்னை தந்தையாய் தழைப்பவன்

அருளே வடிவாய் அடியாருள்ளமே
திருமாளிகையாய் அகலாதுறைவோன்

ஒரு பேரிலன் ஆயிரம் பேருடையான்
கருவாதனை தீரவும் நம் இறைவன் - (ஸாரஸ)

## 100. ராகம் - தேவகாந்தாரி தாளம் - ஆதி

### பல்லவி

ஆரணப் பொருளே அபய மய்யா - மெய் (யாரண)

### அநுபல்லவி

பூரணனே ஜகத் காரணனே - ஸர்வ
புவனபதி நீயே புகலிடமன்றோ

### சரணம்

கல்லினுள் தேரையும் கருப்பையுள் ஜீவனும்
காத்தருளும் கருணாகரனே
இல்லை யென்பார்க் கெல்லாம் ஈந்தருள்வோனே
என திரு விழிகளுக் கருளொளி உதவிய (ஆரண)

### 101. ராகம் - குறிஞ்சி தாளம் - ஆதி

எங்கும் நிறைந்திருக்கும் என் தெய்வம்
எல்லாம் அறிந்திருக்கும்

பொங்கி வரும் கருணை மழை பொழியும்
பொய்யறியா மனத்தில்

தங்கி மகிழ்ந்திடுவான் தயாளன்
தனக்கொரு பயன் கருதா ஐயன்

மங்களமே தருவான் அடியவர்
மனம் நினை வடிவம் கொள்வான்

வாரீர் அவன் தாள் புகழ்ந்து பாடுவோம் - ஒன்று
சேரீர் ஸதானந்த வாழ்வு கூடுவோம்.

### 102. ராகம் - ஹம்ஸத்வனி தாளம் - ஆதி

பல்லவி

காபாலி - கருணைநிதி (காபாலீ)

அநுபல்லவி

சீர்பாதம் மறவாத மெய்யடியார்
சித்தத்தில் ஆனந்த ந்ருத்தம் செய்யும் மயிலை (காபாலி)

## சரணங்கள்

1. ஆதியந்த மில்லாதவனே - அதி
காரநந்திமேல் ஆரோஹணக் கோல (காபாலி)

2. ஆறுபூத்த செஞ்ஜடையும் - திரு
நீறுபூத்த பவள வடிவும் திகழ் உயர் (காபாலி)

3. உனதடி மலரிணை பணிவோர்க்கு - ஒரு
கனவிலும் கவலை துயரம் ஏது - ஐய (காபாலி)

4. ஹர ஹர என மனமுருகித் துதித்து - உனைத்
தெரிசனம் புரிபவர்க் கிஹபரஸுகந் தரும் (காபாலி)

5. துன்பக் கடலில் வீழ்ந்தாலும் - அல்ல
தின்பக் கடலில் ஆழ்ந்தாலும் உன்

6. துணையடிமறவா அடியரை இரங்கி
ரக்ஷிக்கும் அத்புத பிக்ஷாடனக் கோல (காபாலி)

## 103. ராகம் - மாயா மாளவகௌளை தாளம் - ஆதி

### பல்லவி

பொல்லாப் புலியினும் பொல்லாக் கொடியன் என்னைப்
புவிதனில் ஏன் படைத்தாய் - சம்போ (பொல்லா)

### அநுபல்லவி

நல்லோரைக் கனவிலும் - நணுகமாட்டேன்
நல்லது சொன்னாலும் கேழ்க்கமாட்டேன் (பொல்லா)

### சரணம்

உன் நாமம் என் நாவாலும் சொல்ல மாட்டேன்
உள்ளெழும் காமக்ரோதமதம் கொல்ல மாட்டேன்

என்னாளும் மூவாசையை வெல்ல மாட்டேன்
என் ஐயன் உன் ஆலயத்துள் செல்ல மாட்டேன் (பொல்லா)

## 104. ராகம் - குறிஞ்சி தாளம் - ஆதி

### கண்ணிகள்

1. ஜோதி மயமான லிங்கம்
   சுத்த சைதன்ய லிங்கம்

2. ஆதியந்த மில்லிங்கம்
   அன்பிற்கெளி வரும் லிங்கம்

3. உலகிற்காதார லிங்கம்
உயிர்கட் கெலாம் மூல லிங்கம்

4. உமையாள் தொழும் ஸ்வயம்பு லிங்கம்
உரகா பரணச்சிவ லிங்கம்

5. முக்தர் விரும்பும் பூதலிங்கம்
முக்கட் கரும்பாம் ஆத்ம லிங்கம்

6. பக்தர்க் கருளும் விச்வலிங்கம்
பாவனமாம் நாகலிங்கம்.

105. ராகம் - ஸாவேரி தாளம் - ஆதி

பல்லவி

திருவடி பணியும் அன்பர் பவநோய்
தீர்க்கும் அருமருந்தாம் - தெய்வம் (திருவடி)

அநுபல்லவி

அரவு புலிமகிழ அம்பலத்தாடிய
அருமறையுடன் அயனும் மாலும் தேடிய (திருவடி)

### சரணம்

ஸர்வேச்வரன் குபேரன் தோழன்
தரிக்கும் உடையோ புலித்தோல்
பர்வத குமாரி மருவுமொரு பாகன்
பரம யோகீச்வரன்
கர்வமுடன் பற்றிலாமல் ஈரே
ழுலகு தாங்கும் ஏகநாயகன்
நிர்விகாரகுணன் மன இருள் நீக்கும்
அருட்ஜோதி மனமுரை கடந்த ஹரன் (திருவடி)

## 106. ராகம் - காம்போதி தாளம் - ஆதி

### பல்லவி

குஞ்சிதபாதம் நினைந்துருகும் பைங்
கொடிதனைக் கண் பாராய் - இரவு பகல் (குஞ்சித)

### அநுபல்லவி

கஞ்ஜமலரிதழின் விழியாள் ஓயாக்
காதலுடன் சிவகாமி மணாள - நின் (குஞ்சித)

### சரணம்

கொஞ்சும் சதங்கைகலீர் கலீர் - என முடியில்
தழுவி இளம்பிறை பளீர் பளீர் என
நஞ்சந் தவழும் நீலகண்டமும் மின்ன ஒரு
நங்கை கங்கை சடையில் குலுங்க நடமாடும் (குஞ்சித)

## 107. ராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி

### பல்லவி

தெய்வந்தனைப் பஜிப்பீர் - மெய்யன்புடனே. (தெய்வந்தனை)

### அநுபல்லவி

உய்யும்வழி பிறழ்ந்து செய்யுந்தொழில் மறந்து
நையும் பிறவிஆழ்ந்து பொய்யுலகில் வாடாமல் (தெய்வந்தனை)

### சரணங்கள்

சோகம் மிகும் உலகபோகம் ஸுகமென்று வீண்
மோஹங்கொண்டலையாதே தேஹம்விழுமுன் உண்மைத் (தெய்வந்தனை

ஆச்சு எல்லாம், கடைசி மூச்சு உள்ளே அடங்கிப்
போச்சு, இனிமேலென்ன பேச்சு - எனு முன் ஒரு (தெய்வந்தனை)

## 108. ராகம் - தோடி தாளம் - சாப்பு

### பல்லவி

எல்லாம் அவன் செயலென்றெண்ணி மனதில் சாந்த
இன்புற்றிருப்போர் பெரியோர் இன்பதுன்பம் (எல்லாம்)

### அநுபல்லவி

எல்லாவுயிரும் ஈசன் விளையாட்டு - எளியோர்கள்
எல்லாம் ஸோதரர் என்ற பரந்த அன்பறிவோடும் (எல்லாம்)

### சரணம்

அஞ்சின் சேர்க்கையே இந்த அநித்திய உடல் - மண்பொன்
ஆசைப்பெருக்கே ஜன்ம துன்பங்களுக்கு ஹேது
நெஞ்சில் வேற்றுமை தோன்றப் படரும் அஞ்ஞான இருள்
நீரும்பாலுமாய் நிறை ஸதரஸஞான அருள் (எல்லாம்)

## 109. ராகம் - மணிரங்கு தாளம் - ஆதி

### பல்லவி

கடலிலமிழ்ந்திடுவோம் - கருணைக்
கடல் கடவுள் அடிபணிந்து தடங்கருணைக் (கடலில்)

### அநுபல்லவி

உடல் படைத்தோமே ஊனமில் மானிட
உடலினிவருமோ பெரும் ஆனந்தக் (கடலில்)

### சரணம்

பாவபுண்ய மறிந்து நன்னெறி செல்லப்
பகுத்தறிவளித்த பரமனே - பதித

பாவனனே புவனபதியே என்று
பாடியாடி ஒன்று கூடி ப்ரஹ்மானந்தக் (கடலில்)

## துளஸிஸ்துதி

### 110. ராகம் - சக்ரவாகம் தாளம் - ஆதி

### பல்லவி

பரதேவதையே கருணை செய்வாயே
புரமபாவனி துளஸி தாயே (பரதேவ)

### அநுபல்லவி

வரகுண ஜாலே மங்கள மூலே
பாலே எமைப் பரிபாலி ஸுசீலே (பரதேவ)

### சரணங்கள்

கமழ் மணமும் உனது மெல்லியமேனியும்
கண்டு முகுந்தன் உனை முடிமேல் கொண்டான்

அமலையுன்றாலே பாமை முன்றாலே
அந்நாள் ருக்மிணி பந்தயம் வென்றாள் (பரதேவ)

## தீபஸ்துதி

**111. ராகம் - தோடி தாளம் - ஆதி**

### பல்லவி

பாரில் நல்வழி காட்டிப் பரிந்தெனைப்
பாதுகாப்பதுன் பாரம் - தீபாம்பிகே (பாரில்)

### அநுபல்லவி

காரிருள்சூழ் புவிவாழ்வினிலே - இரு
கண்ணிருந்தென்னபயன் - நீ இல்லாமல் (பாரில்)

### சரணம்

உன்போலும் நானொரு பெண்பாவையே - எனக்
கினியுனையன்றி கதியில்லை வேறே
துன்பக் காற்றினால் நான் அழியாமல்
நெறிதவறித் தடுமாறி விழாமல் (பாரில்)

## நாதப்ரஹ்மம்

112, ராகம் - சுத்தஸாவேரி    தாளம் - ஆதி

### பல்லவி

நாதப்ரணவ வடிவம் ஜகமே
நாளும்பணிய அடைவோம் ஸுகமே - ஸ்வரலய (நாத)

### அநுபல்லவி

ஓத நீர்க்கடலின் ஓங்காரநாதம்
உயர் பறவை கீதமுடன் பிந்துகலா (நாத)

### சரணம்

யோகிகள் ஸமாதிநிலையுடன் நாடும்
உயிர்களின் உள்ளும் புறமும் ஆடும்
நாகமும் மணிவிரி படமெடுத்தாடும்
நம்பும் அன்பர் இன்பமோடு பாடும் (நாத)

## மன உபதேசம்

113 ராகம் - சாவேரி தாளம் - ஆதி

### பல்லவி

உலக வாழ்விலொரு மகிழ்வுண்டோ - இந்த
உண்மையை நீ மறந்ததென் கொண்டோ - இந்த (உலக)

### அநுபல்லவி

கலககாம தாமஸகுண இருள்சேர்
காடுபோலும் ஆங்காரப் புலி உலவும் (உலக)

### சரணம்

கடலில் அலைபோலும் ஓயாத்துயரம்
கவலையும் நோயும் கனல்போல் காயும்
உடல் மனைவிமக்களில் ஆசாபாசம்
ஒரு கணம் சாந்தமிலா நரகவாஸம் பூ - (உலக)

**114.** ராகம் - கரஹரப்ரிய    தாளம் - ஆதி

### பல்லவி

காற்றுள்ள போதே தூற்றிக் கொள்வோமே
காலங் கடந்த பின்னாலே வருந்தாமல்    (காற்றுள்ள)

### அநுபல்லவி

ஆற்றில்வெள்ளம் பெருகுமுன் அன்றோ
அணையெழுப்பவேண்டும் - உடலிலே    (காற்றுள்ள)

### சரணம்

வாழ்வினில் இன்பம் தோன்றும் சிலநாள்
மனிதனறிவினால் விளரும் பல நாள்
தாழ்வடைவோம் அறியாமையினாலே
ஸகல ஜகந்நாதன் - கருணையெனும்    (காற்றுள்ள)

**115.** ராகம் - மாயாமாளவகௌள    தாளம் - ஆதி

### பல்லவி

இல்லாததை விரும்பிக் கெடுகிறாய் - அது
எட்டாததால் வருந்திக் கொட்டாவி விடுகிறாய்    (இல்லாததை)

### அநுபல்லவி

எல்லாம் உனது மனத்துள்ளே இருக்க இன்பம்
எங்கே இருக்குதென் றலைந்தே உலகமெங்கும் (இல்லாத தை)

### சரணம்

கானல்தனைக் குளிர்ந்த நீரென்று கருதி - வெங்
கானல்தனில் அலைந்தால் தாகந்தணிந்திடுமோ
சூனிய அஞ்ஞானந்தனில் தூயஒளி தோன்றுமோ
துன்பமயமாம் உலகில் இன்பமெங்கிருந்துவரும் - (இல்லாத தை)

## 116. ராகம் - கரஹரப்ரிய     தாளம் - ஆதி

### பல்லவி

வீணே அழியாதே - பேரின்ப
வீடுபெற எளியவழி இது நெஞ்சே (வீணே)

### சரணங்கள்

1. ஊனுடல் வாழ்வுயிர்க் கெல்லாம் ஸ்வந்தம்
உயர்வு தாழ்வு முதலாம் ப்ரதிபந்தம்

உனக்கேன் உன்வினைப்பிறவி அனந்தம்
உன்னை நீ உணர்ந்துபார் நிரும்பந்தம் (வீணே)

2. வஞ்ச ஜும்பாதகம் விளைக்கும் வித்து
மாயப் பொருளாசையோர் பெரும்பித்து
மான மழிக்கும் நிதமும் ஆபத்து
மாநிலமேல் பெண்களாசை பிடித்து (வீணே)

3. சின மாங்காரம் காமத்தைக் கொல்லு
திருவருள் வழியை அடைக்கும் கல்லு
மனமடங்கும் ஸந்நிதியிலே நில்லு
வாய் மணக்கும் ஐயன் பெயரை நீ சொல்லு (வீணே)

117. ராகம் - தன்யாசி தாளம் - ஆதி

காமத்தை ஜயிக்காதவன் கல்வி பாழ் செல்வம் பாழ் - இழி (காமத்தை)

அநுபல்லவி

ராமத்யானந் தன்னிலும் - சிவ
நாமத்யானந் தன்னிலும் - சிறு
நேமத்தை விடாதவன் தினமெரி
யோமத்தை விடாதவனெனினும் (காமத்தை)

சரணம்

பூமான் தனபதி நிகர்த்தபெருஞ்
சீமான் எண்டிசை புகழ் பரவும்
கோமான் பண்டிதர் சிரம்பணியும்
தீமான் மன்மதன் நிகரழகன்
கோமள ஸுகுணன் இனிய
வசீகர வசனன் - ஸீதா
ராமதாஸ னென்னிலும் விடநட
காமதாஸனுயுழல்பவன் - இழி (காமத்தை)

118. ராகம் - மணிரங்கு தாளம் - ஆதி

பல்லவி

தமிழ்மணம் கமழவேண்டும் - தண்
டமிழ் நாடெங்கணுமாகிலும் தெய்விகத் (தமிழ்)

அநுபல்லவி

அமிழ்தின் மழலைக்குழவிப் பருவம் முதலே
அன்னையின் பால்மணமுடன் தாய்மொழியாம் (தமிழ்)

சரணம்

பாரிலெதுகையுடன் மோனையழகு பிற
பாஷையிலேதுயர் மேடை ப்ரஸங்கமொ -
டாரணங்குகள் மகிழ்ந்தாடரங்குகளிலும்
ஆடல்களிலும் இசைப்பாடல்களிலும் செந் (தமிழ்)

திருவிச நல்லூர் ஐயாவாள் ஸ்துதி (ஸம்ஸ்க்ருதம்)

119. ராகம் - கல்யாணி தாளம் - சாப்பு

பல்லவி

ஸ்ரீதர வேங்கடேசம் - ஸத்குரும் பஜே (ஸ்ரீதர)

அநுபல்லவி

ஸாது ஸந்தோஹ ஸஞ்ஜீவன தாயினம்
ஸததம் சிவநாமாம்ருத பாயினம் (ஸ்ரீதர)

சரணம்

நிகமஸாரவிதம் நிஜஸன்யாஸினம்
நிகிலஜீவ கருணாகர ஹாஸினம்

ஜகதீக்யாத ஸஹஜீபுர வாஸினம்
ஸ்ரீகர பணிதருத்ராக்ஷ விலாஸினம் (ஸ்ரீகர

## வானொலிச் சிறப்பு

**120.** ராகம் - ஹிந்தோளம் தாளம் - ஆதி

### பல்லவி

வானவெளியிலே தவழ் ஆகாச
வாணி வாழி நீடூழி வாழியே (வானவெளி)

### அநுபல்லவி

மானவர் மகிழ ஞானவொளி தரும்
கானமெனும் அம்ருதபான முதவத்தெய்வ

### சிட்டாஸ்வரம்

மாமா காகா மநிதஸ நிகஸா
நீ நீ ஸா ஸா நிநி ஸஸ நிநிதா
மா கா மா மா தத நிநி ஸஸ கஸ
மகா ஸாநி தாமாக ஸாநீஸ (வானவெளி)

## சரணங்கள்

1. தீராத கவலைநோய் வாதைதணியச்
சிந்தையுற இளந்தென்றல் தவழ் பசும்
ஆராமங்களில் பல நூறாயிரம்
க்ராம நகர ஜனஸமூகம் குதூகலிக்க (வானவெளி)

2. கொஞ்சும் மழலையர் குழவிகளேந்தும்
கோதையர் இன்பக் காதலர் அன்பாய்
மிஞ்சும் ஸல்லாப மொடுன்னத மாட
மேடை மாளிகையில் கூடிக் கொண்டாடவும் (வானவெளி)

## பாரதியின் புகழ்

121. ராகம் - ஹரிகாம்போதி தாளம் - ஆதி

### பல்லவி

பாமாலைக் கிணையுண்டோ - ஸுப்ரஹ்மண்ய
பாரதியே நீ பக்தியுடன் தொடுத்த (பாமாலை)

### அநுபல்லவி

பூமாலை மணம் அழகும் அழியும் கணம்
புவனம் உள்ளவரைக்கும் கமழும் எளிய நடைப் (பாமாலை)

சரணம்

தமிழ்நாடு செய்தவப் பயனாய் வந்தவ
தரித்தாய் மனிதர் மனத்திருளோடச்சம் துணித்தாய்
அமிழ்தினும் இனிதுநின் கவிதையின் நயமே
யார்க்கும் தரமோ உன்றன் அத்புத கல்பனைநிறை - (பாமாலை)

## திருக்குறள் மஹிமை

122. ராகம் - ஹரிகாம்போதி தாளம் - ஆதி

பல்லவி

திருக்குறள் எனும் புதையலிருக்கமற்
றொருகுறை நமக்கேது - தேவர்தரு (திருக்குறள்)

அநுபல்லவி

இருக்கு புகல் அறம்பொருள் இன்பம்
எதும் தரும் வானமுதினும் இனிய (திருக்குறள்)

சரணம்

கலைக்கடலடங்கிய தொருடு கடுகே
கனிச்சுவைத் தனித்தமிழ் மொழிக்கொரு விளக்கே
அகரம் முதல எழுத்தெல்லாம் - ஆதி
பகவன் முதற்றே உலகு - எனும் சிறந்த (திருக்குறள்)

## சுக்ரஸ்துதி

**127.** ராகம் - பியாகடை     தாளம் - ஆதி

### பல்லவி

அருள் சுரக்கும் மெய்க்குருவென நானே - திரு
வடியடைந்தேன் சுக்ரபகவானே (வருண்)

### அநுபல்லவி

பரமகருணை நிதி உனது கடைக்கண்
பார்வை கிடைப்பதுயர் பாக்யமல்லவோ திரு (வருண்)

### சரணம்

துஷ்ட அஸுரரும் வணங்க - மெய்யன்பர்க்
கிஷ்டஸித்தி தரும் கலைக்கடலே

சிஷ்டர்பணியும் நவக்ரஹ வேந்தே உன்
திருவுள்ளமிரங்கியென் மன விருளகல மெய்யருள் (வருண்)

ஸௌந்தரரைத் தடுத்தாட்கொள்ளவந்த சிவன் திருக்கோலம்

124. ராகம் - தோடி தாளம் - ஆதி

பல்லவி

தான் மனமருள் சுரந்து வந்
தான் - தன்பெருமையை மறந் - (தான்மனம்)

அநுபல்லவி

நான்முகனொடு திருமாலுந் தேடி
-நாடொண்ணாத நாதன் அன்பனைப் புரக்கத் (தான்மனம்)

சரணம்

மானும் மழுவும் நெற்றிக்கண்ணும் மறைத்தான்
மதியுஞ் சடையை உமையை அகலவைத்தான்

கூனிக் குறுகிக் கரத்தில் கோலைப் பிடித்தான்
குனிந்து தள்ளாடிக் கிழவனைப் போல் நடை தொடுத் (தான்மனம்)

## பரவை நாச்சியார் தெய்விகவனப்பு

125. ராகம் - ஸ்ரீராகம் தாளம் - ஆதி

### பல்லவி

கண்டான் கண்டதும் மோஹம்
கொண்டாள் - வன்றொண்டனை யொண்டொடி (கண்டான்)

### அநுபல்லவி

எண்டோளிறை இணையடி மறவாதவன்
இந்திரனையும் பொருளென மதியாதவன் (கண்டான்)

### சரணம்

பொற்புமிகு மென்மேனி குழைய நூபுர
வொலி ஜல ஜல வெனவே
புவிமிசை அஞ்சியஞ்சி மெல்லடியிணை
பெயர்த்து வைத்திடவே
வெற்பன தனபாரமீது நவமணி
யாரங்களும் புரளவே

மின்னிடை நுவல மின்னன்னம் மஞ்ஞை மட
மானென அயிர்த்திடவே

கற்பினுலகை யன்பச்சமெனும் இரு
வகைத்ததெனச் செய்தே

கைலாகுதரும் பாங்கியரொடு பல
குதலை மழை பெய்தே

முற்பிறப்பின் வந்த வினைதீரத் திரு
முனைப்பாடிவந்த இசைஞானி தந்த

புதல்வனை முழுமுதல்வன் அடிமையென
வரும் புனிதனை உருவுடைமதனை ஸுந்தரனைக் (கண்டாள்)

## மானிட வாழ்க்கை

126. ராகம் - தாளம் - ஆதி

### பல்லவி

வாழ்க்கை யெனும் வண்டி ஓடுதுபார்
வாழ்நாளெனும்தொலை வழிகடந்தே (வாழ்க்கை)

### அநுபல்லவி

சூழுமிரு வினைப் பொதிசுமந்து
துன்பச்சேற்றில் உருண்டு புரண்டு
இன்பச் சோலை நிழலில் தவழ்ந்து (வாழ்க்கை)

### சரணம்

காமக்ரோத இருளடர்ந்த காட்டிலும்
ஞானமென்ற ஒளிபடர்ந்த மேட்டிலும்
பூமியில் அலைந்து ஓய்ந்து
கடகடத்த கால்கள் - ஐம்
புலனைத் தொடர்ந்து பழுதடைந்து
லொட லொடத்த கூண்டு - மனித (வாழ்க்கை)

## சாந்தமிலார்

127. ராகம் - நவரஸகன்னட தாளம் - ஆதி

### பல்லவி

சாந்தமிலார்க் கென்றும் ஸௌக்யமுமேது
தவமுடன் ஸ்வானுபவம் மிகுந்தும் உயர் (சாந்தமி)

### அநுபல்லவி

ஆழ்ந்த கலையறிவும் தர்கசாஸ்த்ர நூ
லாராய்ச்சியோடஷ்ட ஸித்தியடைந்தும் (சாந்தம்)

எல்லாம் படைக்கும் ஒருவனருளாலே - உல
கெல்லாம் உயிரோடுலவும் - மனத்தை

வெல்லாமலும் சினத்தைக் கொல்லாமலும் போலி
வேதாந்த வாதங்களால் என்னபயன் (சாந்தம்)

## புத்தர் ஸ்துதிகள்

128. ராகம் - ஸ்ரீராகம் தாளம் - ஆதி

### பல்லவி

புத்தர் பிரானே நின் ஸத்வகுண
போதம் உலகெல்லாம் பரவுதல் வேண்டும் (புத்தர்)

### அநுபல்லவி

சித்தமலம் அகலவேண்டும் - ஸகல
ஜீவஹிம்ஸை நினைவும் ஒழியவேண்டும் (புத்தர்)

புவியில் பிறந்து பிறந்தலுத்தேன் ஒரு
புண்யமின்றிக் காலங்கழித்தேன் - என்ன
தவமோ நின் ஸன்னிதி யடுத்தேன் ஒரு
தாய் வயிற்றில் பிறவாப் பேரின்பம் படைத்தேன். (புத்தர்)

129. ராகம் - மோஹனம் தாளம் - ஆதி

கண்ணிகள்

1. பாருலகில் உழன்று நொந்தேன் நொந்தேன்
பாவவினையுடல் சுமந்தேன் வந்தேன்.
காரிருள் மாயைக் கிடம் தந்தேன் தந்தேன்.
கமலப் பதம் மறந்தலைந்தேன் எந்தாய்.

2. கர்பவாஸம் இனித் தாளேன் தாளேன்
கர்மபந்தப் பிறவி மீளேன் மீளேன்.
அத்புத புத்த மூர்த்தி நாளும் நாளும்
அடிமை கொண்டென்னை இனி ஆளும் ஆளும்.

130. ராகம் - கரஹரப்ரிய தாளம் - ஆதி

பல்லவி

கண்டேன் வானவர் காணக்காக்ஷி
கருணைபொழியும் இருவிழியும் குறுநகையும் (கண்டேன்)

### அநுபல்லவி

கொண்டேன் ஆனந்தம் பிறவிப் பிணியகல
கோடிகாலம் செய்த கொடும் வினை அகலவும் (கண்டேன்)

### சரணங்கள்

ஸத்தியமுடன் அறமும் சாந்த
தவள நிறமும், தவழு நாற்புறமும்
ஸர்வ ஜீவ கருணாமூர்த்தியை
ஜன்மம் கடைத்தேறக் கண்ணாரக் (கண்டேன்)

## 131. ராகம் - ஸாவேரி தாளம் - ஆதி

### பல்லவி

முருகா முழுமதி பழிக்கும்
அறுமுகா - முகுந்தன் மருக (முருகா)

### அநுபல்லவி

ஒருகால் சரவண பவா என்றோதும் மெய்
யன்பரையாள வலிய வரும் வேல் (முருகா)

### சரணம்

உன் கருணை புகழுந்தரமோ - ஹர
னுமையாலா பரமதயாளா - குற
மின் கலந்த குமரா குஹ தீன
சரண்யா ஸுப்ரஹ்மண்யா - ஸ்ரீ (முருகா)

## 132. ராகம் - காம்போதி தாளம் - சாப்பு

### பல்லவி

மாயாவதார மதுஸூதனு.
மாதவ க்ருபாகர மதிவதன (மாயா)

### சரணங்கள்

1. தாமரைக் கண்ணு ச்யா மளவண்ணு
ஜய கோபிகாரமண ஜனார்த்தன
2. நந்தகுமாரா பக்த மந்தாரா
முரளீதர சௌரே - பராத்பர (மாயா)

**133.** ராகம் - நாட்டைக்குறிஞ்சி தாளம் - ஆதி

## பல்லவி

நடனஸபாபதியே அறிவன் உயர்
நடன கலையின் பெருமை - தில்லை (நடன)

## அநுபல்லவி

இடது பதந் தூக்கி இள நகையுடன் நோக்கி
அடியவர் இடர் நீக்கி
அபயகரமும் வரமருள் கரமும் அசைய ஆடும் (நடன)

## சரணம்

திருமகள் நாதன் ம்ருதங்கநாதம்
தீம் தகிடஜெணகும் என்றதிர

திசைமுகன் தாளம் தளாங்கு தளாங்கு என்
றொலிசெயப் புலி பதஞ்ஜலி மகிழ

ஸரமுனிவரும் ஜய ஜய வென சிவகாம
வல்லியம்மை இரு கண் குளிர

துடியும் டமருவும் டுடும் டுடுவெனவிரி
சடையும் புலியுடையும் ஆட மன்ருடிய (நடன)

## ஷண்முகப்ரியா

134. ராகம் - தில்லானுக்கள் தாளம் - ஆதி

### பல்லவி

தீம் தரன தீம் தீம் தனு
உதர தானி தொந்தர்த தானி திரனன (தீம்தரன)

### அநுபல்லவி

தீம் தனுர தில்லில்லானு ரீகாமாகாரிஜெஜந்தரி
தக ஜணுதோம் தத்தளாங்கு திமிதோம்
தகுஉதர தானிதரிநர (தீம்தரண)

### சரணம்

நந்தகோப ஸுகுமார க்குஷ்ண நவ
•நீரதச்யாமளா - ஆ

ந்த முகுந்த ஹரே பாஹி கோ
விந்த தயாஸிந்தோ - கமபதநி
ததீம் தரன தரா உதர தீம்தா
ரிஸாநிதபஞ் ஸநீதபத
தீம் தா தீம்தாஸநிதபத
ததீம் ஜணுத தபாமபத (தீம்தரன)

135. ராகம் - ஹிந்தோளம் தாளம் த்ரிபுட

பல்லவி

திரனதீம் தீம் தரன தில்லாஞ - லவன லலஞ
திரனதீம் „ „ தீம் தரன
தீம் ததிர தீம்த்ருதீம் தோம்த்ருதீம் நாத்ருதீம் (திரனதீம்)

அநுபல்லவி

தரன திர தஞர உதார திம் திம் ன லீல கல் லோலஉல் லோல
தகஜணுததீம்தா உதரனதிரஞ நிதநிஸ
கநிஸதநிதாம கஸ திமிதகிடததீம் ஜணுத (திரனதீம்)

சரணம்

கஜசர்மத்ர தீனஜன பாலன துரீண
கருணும்புத கடாக்ஷ ரஜதாசல நிவாஸ பரிபாஹி திரனதீம்)

மங்களம்

# திருப்பாவை

(ஸ்ரீ ஆண்டாள் அருளியது)

30 திருப்பாடல்களுக்கும் பதவுரை, பொழிப்புரை உட்பொருள், விளக்கங்களுடன். பி. ஸ்ரீ. எழுதியது. ஸர்விஸ் கமிஷன் தலைவர், திவான்பகதூர் ஸ்ரீ. டி எம் நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் முன்னுரையுடன்.

ரூ. 1—8—0

## முக்கிய அபிப்பிராயங்களுள் சில

திவான் பகதூர் ஸ்ரீ டி. எம். நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் முன்னுரையின் முக்கிய பாகம்:—* திருப்பாவை வேதத்திற்கு ஒப்பானது. *வேதத்தில் உள்ள பொருள்கள் எல்லாம் இதில் அடங்கியிருக்கின்றனவாம். ஆண்டாள் காலம் முதல் இந்நூல் தெய்வபக்தியின் மூலமாக மக்களிடையே அன்பைப் பெருக்கி ஒற்றுமையை நிலைநாட்டி வந்திருக்கிறது. * பி. ஸ்ரீ அவர்களின் 'பெரியாழ்வார்' போன்ற புத்தகங்கள் தமிழ்மக்களுக்குப் பெரும் பயன் அளித்துவருகின்றன. இவரது திருப்பாவைப் பதிப்பும் பெரும் பயன் அளிக்கும் என்பதிலும், இதைத் தமிழகம் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளும் என்பதிலும் ஐயமில்லை.

**ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்:—**

*கண்ணனுக்கு ஒரு காதல் மாளிகை இது என்று கூறி அவர் முடித்திருக்கிறார். ஆண்டாள் மாலை சூடிக் கண்ணாடி காணும் பாவனையில் உள்ள அட்டைப் படம் அழகாய் இருக்கிறது. மார்கழி மாதம் வரும்வரை காத்திராமல் இப்போதே வாசிக்கலாம்.

* மெய்யன்பர் யாவரும் படித்துச் சிந்தித்துத் தெளிந்து இன்புறத்தக்க பான்மை வாய்ந்தது. இதனைப் எல்லோரும் படித்துப் பயனடைவார்களாக.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். சென்னை-4

# வழிகாட்டி

கி. வா. ஜகந்நாதன் எழுதியது

இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் தமிழர் வாழ்க்கை எவ்வாறு இருந்தது? தெய்வ வழிபாடு எப்படி நிகழ்ந்தது? முருகக் கடவுளை எவ்வாறு பூசித்துவந்தனர்?—இத்தகைய கேள்விகளுக்கு விடை வேண்டுமானால் இந்நூலைப் படித்து உணரலாம்.

திருமுருகாற்றுப் படைக்கு மிகத் தெளிவான முறையில் அமைந்த விளக்கமும், கதைபோல் அமைந்த வரலாறுகளும், நூல் முழுவதும் உள்ள கருத்தின் தொகுப்பாகிய அறிமுகமும் அமைந்த புத்தகம் இது.

தண்டமிழ்ப் பெருஞ் சான்றோராகிய திரு. வி. க. வின் முகவுரையும் மூவர்ண அட்டைப் படமும் இதற்குத் தனிச் சோபையை அளிக்கின்றன.

விலை ரூ. 2—8—0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-4

# என் சரிதம்

மகாத்மா காந்தி
எழுதியது

மகாதேவ தேசாய், ஹரிபாவூ உபாத்தியாய, ஹிந்தியில் சுருக்கியதை இனிய எளிய நடையில் கா. ஸ்ரீ. ஸ்ரீ. மொழிபெயர்த்தது,

விலை. ரூ. 3—8—0

## பத்திரிகைகளின் அபிப்பிராயங்களிற் சில

பாரத தேவி:—எளிய வாழ்க்கையும், உயரிய சிந்தனையும் நிறைந்த காந்திஜியின் சரிதம், தூய்மையான துணிவு நிறைந்த வாழ்வுக்கு ஒரு வழிகாட்டியாகும்.

ஹனுமான்:—மாணவர் மட்டுமின்றி, தேசீய ஆர்வங் கொண்ட எல்லா இளைஞர்களுக்கும் பயன்படும் என்பதில் சந்தேகமில்லை.

ஆனந்த விகடன்:— மிகவும் உயர்ந்த முறையில் பிரசுரித்திருக்கிறார்கள் அல்லயன்ஸ் கம்பெனியார். *இந்நூல், பள்ளிக்கூடங்களில் பாட புத்தகமாக வைக்கத்தகுந்தது.

கல்கி:—* ஓர் அதிமதுர பொக்கிஷம் என்று சொல்லலாம்.

ஹிந்துஸ்தான்:— இந்த அற்புதமான சரிதத்தைப் படித்தால் புனிதமடைவதுடன் பயனும் பெறலாம்.

சக்தி:—முன்பு இல்லாத புது விஷயங்கள் பல இதில் சேர்க்கப் பெற்றுள்ளன.

தினமணி:—மாணவர் மாத்திரமல்ல; ஒவ்வொருவரும் அவசியம் படிக்கவேண்டும். வாழ்வுக்கோர் நல்ல வழிகாட்டி 'என் சரிதம்'. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய புஸ்தகம்.

அல்லயன்ஸ் கம்பெனி மயிலாப்பூர் சென்னை 4

## எங்கள் உயரிய நூல்களில் சில

| | | | |
|---|---|---|---|
| 1. | பெரியாழ்வார்—பி. ஸ்ரீ. எழுதியது | 3 | 0 |
| 2. | ஆண்டாள் ,, | 1 | 4 |
| 3. | திருப்பாவை ,, | 1 | 8 |
| 4. | கண்ணபிரான் ,, | 0 | 14 |
| 5. | வழிகாட்டி—கி. வா. ஜகந்நாதன் | 2 | 8 |
| 6. | மாணிக்கவாசகர் அடிச்சுவட்டில் | 5 | 0 |
| 7. | யோக வாசிஷ்டம் | 5 | 0 |
| 8 | வேலும் வில்லும்—ரா. பி. சேதுப்பிள்ளை | 1 | 4 |
| 9. | கந்தபுராணச் சுருக்கம் ,, | 5 | 6 |
| 10. | திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை<br>வள்ளிமலை சுவாமிகள் | 1 | 4 |

அல்லயன்ஸ் கம்பெனி
மயிலாப்பூர் :: சென்னை—4